# The Morning Star

A Christian Publication

# உதயதாரகை

Established 1841

Subscription Rs.100/= (postage Separate)

*Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people.*

The Morning Star
CACM Head Office
Christian Theological Seminary
Maruthanarmadam
Chunnakam
Sri Lanka.

Email: themorningstar1841@gmail.com - Vol. 183 - Jaffna - Friday, 12th July 2024 - No. 02 - Web: www.cacmchurch.com


## திருச்சபைத் தலைவருடைய தலைமையுரை



**“இந்த நியாயப் பிரமாணப் புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக: இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக: அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்”**

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே! பிரியமும் வாஞ்சையுமுள்ளவர்களே! உங்கள் அனைவரையும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் பன்னிரண்டாவது பேரவைக் கூட்டத் தொடரிற்குக் கிறிஸ்து இயேசுவின் இனிய நாமத்தில் அன்போடு வரவேற்பதோடு, இந்தக் கூட்டத்தொடருக்கான தலைமையுரையினையும் உங்களோடு பகிர்ந்துகொள்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்தச் சந்தர்ப்பத்தை ஆண்டவர் எனக்கீந்த பெரிதான கிருபைக்காக நன்றிகளையும் ஆண்டவருடைய திருப்பாதத்திலே சமர்ப்பிக்கின்றேன்.

இஸ்ராயேல் மக்களுடைய வாழ்க்கையில் ஒரு அத்தியாயம் நிறைவுபெற்று இன்னுமொரு அத்தியாயம் ஆரம்பமாகின்றது. இஸ்ராயேல் மக்கள் மோவாபின் சம வெளிகளைக் கடந்து, நேபோ மலையில் ஏறுகின்றார்கள். அங்கு கர்த்தர் மோசேயுக்கும் அவன் சந்ததிக்கும் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தினைக்

(06ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை 12வது வருடாந்த பேரவைக் கூட்டம்

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் 12வது வருடாந்த பேரவைக் கூட்டம் **“மாறிடும் உலகம், மாறாதவர் கடவுள்”** என்னும் பொருளில் 31.05.2024 வெள்ளிக்கிழமை




பேரவைத் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

பேரவைக் கூட்டம் காலை 9.00 மணியளவில் வழிபாட்டுடன் ஆரம்பமானது. இவ்வாழிபாட்டினை கிறிஸ்த இறையியல் கல்லூரியின் முதல்வர் அருட்பணி ஏ. கமலக்குமாரன் அவர்கள் வழி நடத்தினார். திரு. மனோ தேவசகாயம் அவர்கள் இசைவாத்தியங்கள் இசைத்தார். மெதடிஸ்த திருச்சபையின் யாழ் சேகரக் குரு அருட்பணி ஞானரூபன் அவர்கள் இறை செய்தியினை பகிர்ந்து கொண்டார். **“கடவுள் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்”** என்ற வார்த்தையை மையப்படுத்தி, பேரவையின் மகுட வாக்கியத்திற்கு வலுச் சேர்த்து இறை செய்தியைப் பகிர்ந்து கொண்டதுடன் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வாழ்த்துதல்களையும் பகிர்ந்துகொண்டார்.

2023ம் ஆண்டு பேரவைக் கூட்டத் தொடருக்குப் பின்னர் கடவுளுக்குள் நித்திரை அடைந்தவர்களுக்கான பிரேரணைகள் ஏறெடுக்கப்பட்டன. இப் பிரேரணையில் பின் வருபவர்களுக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது :

**அருட்பணி ஏ.வி. இயேசுதாசன்**

(09ஆம் பக்கம் பார்க்க)

## 17 வருடங்களை நிறைவு செய்யும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை

**அமெரிக்கன் மிசனுடைய பணிகள் 1816 ஆம் ஆண்டிலேயே தெல்லிப்பளை என்றும் கிராமத்தில் மிசன் தொண்டர்களான அருட்கலாநிதி. டானியல் பூவர், திருமதி. சூசன் பூவர், அருட்பணி. எட்வேட் வோறன் ஆகியோராலும் 1817 ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் அருட்பணி. ஜேம்ஸ் றிச்சேட்ஸ், திருமதி. சாரா றிச்சேட்ஸ், அருட்பணி. பென்ஜமின். சி. மெக்ஸ் திருமதி. மெக்ஸ் ஆகியோராலும்**

(11ஆம் பக்கம் பார்க்க)

## கருத்தரங்குகள்



கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மருதனார்மடத்தில் இரண்டு நாட்கள் கருத் தரங்குகள் நடைபெற்றன. இதில் 03.07.2024 (புதன் கிழமை) அன்று **“செயற்கை நுண்ணறிவும் ஆன்மீகமும்”** (Artificial Intelligence and Spirituality) எனும் தலைப்பிலும் 04.07.2024 (வியாழக்கிழமை) அன்று **“திருப்பணி ஒப்படைப்பை மறுசிந்தனை செய்தல்”**

(05ஆம் பக்கம் பார்க்க)

## பரந்துபட்ட பணிமன்றின்

### தெற்காசியாவுக்கான பணிப்பாளர் நாயகத்தின் இலங்கை வருகை

### Global Relations Minister, South Asia

யுனைற்டெட் சர்ச் ஆப் கிரைஸ்ட் மற்றும் கிறிஸ்தவ சீடத்துவ திருச்சபைகளுக்கான பரந்துபட்ட சபைபணி மன்றின் தெற்காசியப் பணிப்பாளர் கலாநிதி. சறோஸ் கோஷி அவர்கள் கடந்த 06.05.2024 அன்று பலாலி சர்வதேச விமான நிலையம் வழியாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார். நான்கு நாட்கள் விஷயத்தைக் மேற்கொண்ட அவர் திருச்சபை மக்களுடைய நலனினைக் கருத்தில் கொண்டு, அவர்களுடைய எதிர்கால நன்மைகளுக்காகப் பல தரப்பட்ட நிலையில் உள்ள மக்களைச் சந்தித்திருந்தார். அவ்வேளையில் பல திருச்சபைகளையும் அவர் சந்தித்ததோடு இறையியல் கல்லூரியையும் சந்தித்து அங்கு உரையாடல்களை மேற்கொண்டார். பின்னர் 10ம் தேதி கொழும்பிலும் பலதரப்பட்ட சபை அமைப்புக்களையும் தனிநபர்களையும் சந்தித்த அவர் கட்டுநாயக்க வழியாக சென்னைக்குப் பயண மானார்.



பங்காளதேஷ், புதுடெல்லி, சென்னை கூட்டங்களை நிறைவு செய்து இலங்கைக்கு வருகை தந்த அவருடைய பயணத்திற்கான உள்ளக ஒழுங்குகளை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை அலுவலகர்கள் மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்தவ இறையியல் கல்லூரி பட்டமளிப்பு விழா

எமது கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழா மிகவும் சிறப்பான முறையில் 20 ஏப்ரல் 2024 அன்று கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. கிறிஸ்தவ இறையியல் கல்லூரி முதல்வர் அருட்பணி. ஏ. கமலகுமாரன் அவர்களது ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவில் 300க்கு மேற்பட்டவர்கள் பங்கு கொண்டமை சிறப்பம்சமாகும். கிறிஸ்தவ கல்வி டிப்ளோமா, கிறிஸ்தவ கல்வி இளங்கலைமாணி, இறையியல் இளங்கலை மாணி

(05ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர் பேனாமுனையில்..

# வாருங்கள்!

## எமது சபையைக் கட்டி எழுப்புவோம்!!

வேதத்தில் அருமையான வசனம் ஒன்று உள்ளது – *முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.* (ஆகாய் 2:9)

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை ஞாயிறை அண்மையில் அனுஷ்த்தோம். இஸ்ரவேலர் தமது வரலாற்றின் பாதையை தமது பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தது போலவும் பஸ்கா மூலமும் நினைவு கூர்ந்ததும் போலவும் எமது சி.ஏ.சி.எம் திருச்சபையை ஆண்டவர் வழிநடாத்திய விதத்தை எண்ணி ஆண்டவருக்கு நன்றி செலுத்தக் கடைமைப் பட்டிருக்கிறோம்.

இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்தில் அடிமைகளாய் ஒப்புக்கொடுக்கப்பட்டபோது, பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து  கர்த்தருடைய ஆலயத்தையும் ராஜாவின் அரண்மனையையும் எருசலேமின் சகல கட்டடங்களையும் அக்கினியால் சுட்டெரித்து எருசலேமின் அலங்கங்களை இடித்து கர்த்தருடைய ஆலயத்தின் வெண்கலத்தையும் பணி மூட்டுகளையும் எடுத்துக் கொண்டு மிகுதியாயிருந்த ஜனங்களையும் சிறையாகப் பாபிலோனுக்கு கொண்டு சென்றான். பெர்சிய ராஜ்யபாரம் ஸ்தாபிக்கப்படுமட்டும் அங்கே அவர்கள் எழுபது வருடமட்டும் அடிமைகளாய் இருந்தனர். கர்த்தர் பெர்சிய ராஜாவாகிய கோரேசுடைய ஆவியை ஏவினதினால் அவன், யூதாவிலுள்ள எருசலேமுக்கு போய் பரலோகத்தின் தேவனாகிய கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டக் கட்டளையிட்டான்.

அப்பொழுது செருபாபேல், யோசுவா தலைமையில் யூதாவின் ஜனங்களில் ஒரு கூட்டத்தார் எருசலேமுக்கு வந்தனர். இவர்கள் அத்தேசத்தின் ஜனங்களுக்குப் பயந்ததினால் முதலாவது பலிபீடத்தை அதின் ஆதாரங்கள் மேல் ஸ்தாபித்து கர்த்தருக்குப் பலி செலுத்தினார்கள். பின்பு தேவாலயத்தைக் கட்ட அஸ்திபாரம் போட்டனர். பின்னர் சில பிரச்சனைகளால் ஆலயம் கட்டுவதை விட்டுத் தங்கள் சொந்த வேலைகளைக் கவனித்தார்கள். அப்பொழுது கர்த்தர் ஆகாய், சகரியா போன்ற தீர்க்கத்தரிசிகளின் மூலம் ஆலயத்தை கட்டும்படி அவர்களோடு பேசினார். ஆகாய் தீர்க்கத்தரிசியின் மூலம் இறைவன் தன்னுடைய ஆலயத்தைக் கட்டும்படியாய் சோர்ந்து போயிருந்த அந்த யூதர்களுக்குச் சொன்னார்.

### 1. ஆலயத்தை கட்டுவோமாக!

யூதாவின் ஜனங்கள் பிரச்சனைகளைக் கண்டு பயந்து தங்கள் கைகளை தளரப்பண்ணி ஆலயத்தைக்  கட்டாமல், ஏற்றவேளை இன்னும் வரவில்லை என்று சாக்குபோக்கு சொல்லி கொண்டனர். இறைவன் ஆலயத்தை கட்டும்படி அவர்களை அழைத்து வந்தார். ஆனால் ஜனங்களோ தங்கள் சொந்தக் காரியங்களை முக்கியப்படுத்தி வாழ்ந்து வந்தனர். ஆதனால் அவர்களுக்கு ஆசீர்வாதம் குறைவுபட்டது. இறைவன் ஆகாய் தீர்க்கத்தரிசியைக் கொண்டு “உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள்” என்று கூறினார்.மேலும் நீங்கள் “ஆலயத்தைக் கட்டுங்கள் அதின் பேரில் நான் பிரியமாயிருப்பேன். அதினால் என் மகிமை விளங்கும் என்று விளம்பினார்.  ஆகாய்:1:5–11.

இறைவன் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தாம் வாசமாயிருக்க ஆசாரிப்புக் கூடாரத்தையும் பின்பு ஆலயத்தையும் கட்டச் சொன்னார். இன்று இறைவன் வாசமாய் இருக்கும்  ஆலயம் நம் சரீரமே என வேதம் கூறுகிறது. உங்கள் சரீரமானது நீங்கள் இறைவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள். 1கொரிந்தியர்:6:19. இன்று விசுவாசிகளாகிய நமக்குப் பரிசுத்த ஆவியானவர் வாசமாயிருக்கிற தம்முடைய ஆலயமாகிய நம் சரீரத்தைக் கட்டும்படி விரும்புகிறார். நம் சரீரம் ஆவிக்குரிய வளர்ச்சியடைய வேண்டும் என்று விரும்புகிறார்.

இன்றே எம் உள்ளமாகிய ஆலயத்தைக் கட்டுவோம், **“இறைவனுடைய மகிமை விளங்கும்படியாகக்  கட்டுவோம்.”** பரிசுத்த ஆவியானவர் தங்கும் ஆவிக்குரிய ஆலயத்தை இறை மகிமை விளங்கும்படியாக நாம் கட்டும்போது உலகப்பிரகாரமான நன்மைகளினாலும் ஆசீர்வாதங்களினாலும் அவர் நம்மை முடிசூட்டுவார் என்பதில் சந்தேகமில்லை.

### 2. சோர்ந்து போகாமல் உற்சாகமாய்க் கட்டுவோமாக!!

சாலோமோன் ராஜா இறைவனுக்காகக் கட்டின பிரம்மாண்டமான ஆலயத்தைக் கண்டவர்களின் பார்வைக்கு இந்தப் புதிய ஆலயம் ஒன்றும் இல்லாததுபோல இருந்தது. ஜனங்கள் சாலோமோன் ராஜா கட்டின ஆலயத்தின் பிரமாண்டத்தைக் கண்டதால் இந்த ஆலயத்தில் இறைவனுடைய மகிமை இருக்குமா எனச் சந்தேகித்தனர். சேனைகளின் இறைவனாகிய

(11ஆம் பக்கம் பார்க்க)

# Rev. A. K. சுரேந்திரன்

## 1963 - 2021

அருட்பணி. ஏ. கே. சுரேந்திரன் அவர்கள் மிகவும் அமைதியும், சாந்தமும் நிறைந்த ஒரு இறைபணியாளன். அதே வேளையில் நகைச்சுவையினையும்



ஆழமான சிந்தனைகளையும் கொண்ட ஒருவர் இவருடைய முழுப் பெயர் **அருளானந்தம் கிங்ஸ்லி சுரேந்திரன்** என்பதாகும். இவர் வடமராட்சி யிலே கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள கிழவிதோட்டம் என்ற கிராமத்திலே திருவாளர் சின்னக்குட்டி அருளானந்தம் அவர்களுக்கும் திருமதி கிரேஸ் சிவக்கொழுந்து அருளானந்தம் அவர்களுக்கும் மூத்த மகனாக 22.08.1963ல் பிறந்தார். இவர் தன்னுடைய ஆரம்ப கல்வியை கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலத்திலும் உயர்கல்வினைக் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.

இறைபணிக்கெனத் தம்மை ஒப்புக்கொடுத்த இவர், 1989 ஆம் ஆண்டு மருதனார்மடத்தூரில் உள்ள கிறிஸ்தவ இறையியல் கல்லூரியிலே இணைந்து இறையியல் கற்றார். நான்கு வருடக் கல்வினை நிறைவு செய்த இவர், 1993 மே மாதம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மகிழ்ச்சிபுரம் திருச்சபையின் பணிகளுக்கு நியமிக்கப்பட்டார். 1995 வரை அங்கு பணியாற்றிய இவர் அதன் பின்னர் ஏழாலை வடக்கு (1995-1998), ஏழாலை தெற்கு (1996-1999), உடுப்பிட்டி (1999-2003), அளவெட்டி (2003-2010), மானிப்பாய் (2010-2014), தெல்லிப்பளை (2014-2018), பண்டத்தரிப்பு (2018-2021) ஆகிய இடங்களில் இறைப்பணி புரிந்தார்.

இவர் கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபையைத் தாய்த் திருச்சபையாகக் கொண்டவர். இவருடைய இளைய சகோதரன் அருட்பணி சாம் சுபேந்திரன் மெதடிஸ்த திருச்சபையில் இறைபணியாளராகப் பணியாற்றி வருகின்றார். அருட்பணி. ஏ. கே. சுரேந்திரன் அவர்கள் தன்னுடைய இறைபணிக்கும் வாழ்வுக்கும் துணையாக பண்டத்தரிப்பைச் சேர்ந்த எமி அஜித்தா அவர்களை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு அலன் அபிஷேக், ஆன் அபிஷாரா எனும் இரு பிள்ளைகள் உள்ளனர். 2007 ஆம் ஆண்டு அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை உருவான பின்னர் அருட்பணி. ஏ. கே. சுரேந்திரன் அவர்கள் ஊழியர் சங்கத்தினுடைய செயலாளராகவும் சி.ஏ.சி.எம் யாழ் பிராந்தியத்தினுடைய செயலாளராக இரு தடவைகளும் பணியாற்றியுள்ளார்.

இவர் மானிப்பாயிலே பணியாற்றிய காலத்திலேயே புதிதாகக் குழாய் கிணறு தோண்டப்பபடு மிசன் இல்லத்துக்கு அருகாமையில் நீர்த்தாங்கி ஒன்றும் அமைக்கப்பட்டுத் நீர் குழாய் அமைப்புக்களும் நிறுவப்பட்டன. அத்துடன் ஆலய உட்சுவரின் பூச்சுக்கள் முழுமையாக அகற்றப்பட்டு ஏறத்தாழ 2 அங்குலம் கனதியில் புதிதாக சுவர் பூசப்பட்டு வெள்ளையடிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டில் “பிறதேசத்துக்கு மிசன் தொண்டர்களை அனுப்பும் அமெரிக்க சங்கத்தினுடைய (ABCFM) 200 ஆவது ஆண்டுவிழா நிகழ்வு மிகவும் கோலாகலமாக மானிப்பாய் ஆலயத்தில் மூன்று நாட்கள் நடைபெற்றன. சைக்கிளோட்டம், மரம் நடுகை, கட்டுரைப் போட்டி, சித்திரப்போட்டி, கண்காட்சி, திருவிருந்து வழிபாடு, பொதுக்கூட்டம் போன்ற பல நிகழ்வுகள் சி.ஏ.சி.எம் இன் தலைவராக இருந்த அருட்பணி. ஏ. ஜெயக்குமாரன் அவர்களுடைய வழிகாட்டலிலும் அருட்பணி. ஏ. கே. சுரேந்திரன் அவருடைய தலைமையிலும் மிகச் சிறப்பாக நடந்தன.2014 இல் தெல்லிப்பளை திருச்சபைப் பணிகளை பொறுப்பெற்ற இவர் 2015 இல் யுத்தத்தினால் சேதப்படுத்திருந்த தெல்லிப்பளை திருச்சபையின் புனரமைப்புபணிகளைத் திருச்சபையின் புலம்பெயர்ந்த சமூகத்தின் உதவியுடன் முன்னெடுத்தார். 2016 இல் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை 200 ஆவது ஆண்டுவிழா நிகழ்வு மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. மிசன் கல்லறை அஞ்சலி, மரம் நடுகை, கண்காட்சி, திருவிருந்து வழிபாடு, பொதுக்கூட்டம் போன்ற பல நிகழ்வுகள் சி.ஏ.சி.எம் இன் தலைவராக இருந்த அருட்பணி. ரி. தேவநேசன் அவர்களுடைய வழிகாட்டலில் அருட்பணி. ஏ. கே. சுரேந்திரன் அவருடைய காலத்தில் மிகச் சிறப்பாக நடந்தன.

தொடர்ந்து 2018 இல் பண்டதரிப்பு திருச்சபை பணிகளை பொறுப்பேற்ற இவர் பண்டதரிப்புத் திருச்சபையின் புனரமைப்புபணிகளைத் திருச்சபை மக்களின் உதவியுடன் முன்னிடுத்தார். பண்டத்தரிப்பில் இவர் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது, 2021 மார்ச் மாதம் எதிர்பாராத விதமாக மாரடைப்பினால் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

தகவல் தொகுப்பு

**அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன்**

# இறைபணியில் இணைந்தார் இறைபணியாளர்!!

சகோ. பி. ஜோன் பிரகாஸ் அவர்கள் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் கற்று அரங்கேறி, எமது அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் புதிய இறைபணியாளரானார். இவர் சுதந்திரபுரம் திருச்சபையின் அங்கத்தவராக இருந்து, கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் இறையியல் பணிக்கெனத் தன்னை அர்ப்பணம் செய்தார். கடந்த பெந்தேகோஸ்தே ஞாயிறான 19 மே 2024 அன்று இவருக்கான வழியனுப்பு வழிபாடு உடுவில் சி.ஏ.சி.எம் நல்லாயன் ஆலயத்தில் நடைபெற்றது. 160 பேருக்கு மேலான இறைமக்கள் இந்த வழிபாட்டில் கலந்து கொண்டு இறைபணியாளரை வாழ்த்தினார்கள்.



கிறிஸ்தவ இறையியல் கல்லூரயின் முதல்வர் அருட்பணி. ஏ. கமலகுமாரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வழிபாட்டில் அருட்பணி. ரி. தேவநேசன், அருட்பணி. ஜே. ஞானப்பிரகாசம், அருட்பணி. பி. தேவமித்திரன், அருட்பணி. ரி. டானியல் றஞ்சித், அருட்பணி. எம். ஜெயானந்தராசா மற்றும் அருட்பணி. டேவிட் நிருசிகன் ஆகியோர் இணைந்து கொண்டனர். சகோ. எஸ். அற்புதஜீவன், திருமதி. எஸ். நளாயினி, சகோ. பி. ஜோன் பிரகாஸ் ஆகியோர் வேதப்பாடங்களை வாசித்தனர். அன்றைய நாளுக்குரிய இறை செய்தியை சி.ஏ.சி.எம் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் பகிர்ந்து கொண்டதுடன் உத்தியோகபூர்வமாக சகோ. ஜோன் பிரகாஸ் அவர்களை இறைபணிக்கென அர்ப்பணம் செய்தார். கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் ஆளுநர் சபைச் செயலாளர். பேராசிரியர். கலாநிதி. பிறின்ஸ் ஜெயதேவன் அவர்கள் நன்றியுரை நவின்றார்.

கடந்த 30 மே 2024 அன்று நடைபெற்ற எமது வருடாந்த பேரவைக் கூட்டத்தில் சகோ. பி. ஜோன் பிரகாஸ் அவர்கள் சி.ஏ.சி.எம் திருச்சபையின் இறைபணியாளராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். தற்போது அவர் ஜெயபுரம் மற்றும் ஆனைவிழுந்தான் சபைகளுக்கு அருட்பணியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். உதயதாரகை அவரை வாழ்த்துகிறது.

## போட்டி இல. 001 கான விடைகள்

| | |
|---|---|
| 1. இயேசுவின் | 2. மாற்கு |
| 3. 40 நாட்கள் | 4. விதவைகள் விசாரிக்கப்பட |
| 5. தமஸ்கு | 6. மத்தேயு, லூக்கா |
| 7. இறைவனின் வார்த்தைகள் | 8. 40 வருடம் |
| 9. விசுவாசத்தின் தந்தை | 10. ஏசாயா |
| 11. இறைசாயல் | 12. ஏரேமியா |

### பங்குபற்றியவர்கள்

செல்வன். சாம் ஆதவன்
செல்வி. மிஷிலா
செல்வி. துஷியந்தி வில்சன் ராஜ்குமார்
செல்வி. வி. துவாரகா
செல்வி. ஜசில்டா யேசுராசா
கிரேஸ் ஜஸ்மின்






**குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டவர்**
செல்வி. வி. துவாரகா

# வினாடிக்கு வினா

## போட்டி இல. 002

1. இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்தபின் யோசுவா 12 கற்களை நாட்டியமை எவற்றைக் குறிக்கின்றன?
   1. 12 வருடங்களை 2. 12 மாதங்களை 3.12 திருத்தூதுவர்களை 4. 12 கோத்திரங்களை

2. 969 வருஷம் வரை உயிரோடிருந்தவன் யார்?
   1. ஆதாம் 2. சேத் 3. மேத்தூசலா 4. நோவா

3. நற்செய்தி நூல்களுள் முதலில் எழுதப்பட்ட நூல் யாது?
   1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவான்

4. வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஒரே பெண் நியாயதிபதி யார்?
   1. மிரியாம் 2. யாகேல் 3. தெபோராள் 4. சாராள்

5. “ஆண்டவரே இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்” என்று மிகுந்த சத்தமிட்டு இறந்தவர் யார்?
   1. இயேசு 2. பேதுரு 3. ஸ்தேவான் 4. தோமா

6. யாக்கோபு தவறான முறையில் தந்தையிடமிருந்து ஆசியைப் பெறுவதற்கு காரணமாயிருந்தவள் யார்?
   1. ரெபேக்காள் 2. சாராள் 3. ராகேல் 4. சில்பாள்

7. சாலோமோன் ராஜாவின் மகன் யார்?
   1. யெரொபெயாம் 2. ரெகொபெயாம் 3. நாதாப் 4. யோராம்

8. மோசேயின் மரணத்தின் பின் இஸ்ரவேல் மக்களின் தலைவனாகத் தெரிந்து கொள்ளப்பட்டவன் யார்?
   1. பேதுரு 2. ஆரோன் 3. யோசுவா 4. யாக்கோபு

9. இடிமுழக்க மக்களென்று அர்த்தங்கொள்ளும் வார்த்தை
   1. பொவனெர்கேஸ் 2. பேயெல்செபூல் 3. லேகியோன் 4. யேகோவா நிசி

10. ஆசாரியனாகவும், தீர்க்கதரிசியாகவும், நியாயாதிபதியாகவும் பணி புரிந்தவர் யார்?
    1. சாலோமோன் 2. சாமுவேல் 3. கிதியோன் 4. யெப்தா

11. எகிப்து தேசத்திலே ஏராளமாய்ப் பெருகிப் பலத்திருந்தவர்கள் யாவர்?
    1. கானானியர் 2. எகிப்தியர் 3. இஸ்ரவேலர் 4. எமோரியர்

12. இயேசுவின் மறுரூபச் சம்பவம் எந்த சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?
    1. மத்தேயுவில் 2. மாற்குவில் 3. லூக்காவில் 4. மேற்கூறிய மூன்றிலும்

மேற்காணும் போட்டிக்கான பதில்களை எழுதி அனுப்புங்கள். சரியான பதிலை அனுப்பி வைக்கும் போட்டியாளர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசில் வழங்கப்படும். மற்றைய வெற்றியாளர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சரியான பதில்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

### அனுப்ப வேண்டிய முகவரி

உதயதாரகை
ஆசியா இல்லம்,
மருதனார்மடம், சுன்னாகம்

### மின்னஞ்சல் முகவரி

*themorningstar1841@gmail.com*

**Whatsapp**
0773 627 537

**இறுதித் திகதி 30-08-2024**

# குறுக்கெழுத்துப் போட்டி

## போட்டி இல 002

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | | 02 | | 03 |
| 04 | | | ■ | |
| 05 | ■ | 06 | 07 | |
| 08 | ■ | 09 | | |
| | ■ | 10 | | |

### இடமிருந்து வலம்

01. கர்த்தர் பார்த்துக் கொள்வார்
04. புகையிரதம் என்பதன் பேச்சுவழக்கு
05. "போ" என்பதன் எதிர்ச்சொல்
06. கூர்மையானது
09. பெண்ணின் பெயர் "அமைதி" என்றும் அர்த்தம் பெறும் ( குழம்பியுள்ளது )
10. நாதியற்ற பெண் / துணையற்றவள் ( திரும்பியுள்ளது )

### மேலிருந்து கீழ்

01. கர்த்தர் என் ஜெயக்கொடியானவர்
02. இங்கு பத்திரிக்கை படிக்கலாம்
03. இயேசுவின் சீடர் ஒருவர் ( குழம்பியுள்ளது)
07. "பக்தி"எனும் சொல் இந்தத் தமிழ்ச் சொல்லிருந்து தான் வந்தது. "வரிசை"என்றும் பொருள்படும் ( குழம்பியுள்ளது)
08. இரவு – நள்ளிரவு
09. வீதி

மேற்காணும் போட்டிக்கான பதில்களை எழுதி அனுப்புங்கள். சரியான பதிலை அனுப்பி வைக்கும் போட்டியாளர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசில் வழங்கப்படும். மற்றைய வெற்றியாளர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சரியான பதில்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

## போட்டி இல. 001 இல்

### பங்குபற்றியவர்கள்

செல்வன். சாம் ஆதவன்
செல்வி. மிஷிலா
செல்வி. துஷியந்தி வில்சன் ராஜ்குமார்
செல்வி. வி. துவாரகா
செல்வி. ஜசில்டா யேசுராசா
கே. ஆன் கிஸ்றினா
கிரேஸ் ஜஸ்மின்






**குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டவர்**

செல்வி. துஷியந்தி வில்சன் ராஜ்குமார்

# தூய ஆவியார் திருநாள்

## கிறிஸ்த சேவ ஆச்சிரமம் – மருதனார்மடம்

வருடம் தோறும் ஆச்சிரமத்தில் இந்த தூய ஆவியார் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அவ்வண்ணமே இவ்வருடமும் கடந்த மே மாதம் 18,19ஆம் திகதிகளில் ஜெரோம் அண்ணன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நற்கருணை வழிபாட்டில் இறைசெய்தியை உரும்பிராய் இலங்கை திருச்சபையின் குருவானவர் அருள்பணி. என். ஜே.ஞானகாருண்யன் அவர்கள் பகிர்ந்துக்கொள்ள, திருமறைப் படிப்பினை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் பகிந்துகொண்டார்.



19ஆம் திகதி நடைபெற்ற நற்கருணை வழிபாட்டை ஜெரோம் அண்ணன் அவர்கள் நடத்தினார்.

## கிறிஸ்த சேவ ஆச்சிரமம் – கிரான்

வருடம் தோறும் ஆச்சிரமத்தில் இந்த தூய ஆவியார் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அவ்வண்ணமே இவ்வருடமும் கடந்த வைகாசி மாதம் 18,19ஆம் திகதிகளில் திரு. குகாந்தன் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நற்கருணை வழிபாட்டில் இறைசெய்தியை வாழைச்சேனை மெதடித்த திருச்சபையின் குருவானவர் அருள்பணி. கே.



நிஷாந்தன் அவர்கள் பகிர்ந்துக்கொள்ள, திருமறைப்படிபினை முறக்கொட்டான்சேனை இலங்கை திருச்சபையின் குருவானவர் அருள்திரு. என். சபிலாஸ் அவர்கள் பகிந்துகொண்டார்.

19ஆம் திகதி நடைபெற்ற நற்கருணை வழிபாட்டை வாழைச்சேனை இலங்கை திருச்சபையின் குருவானவர் அருள்பணி. என். வரதராஜன் அவர்கள் நடத்தினார்கள்.

## போட்டி இல 001 கான சரியான பதில்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01 வி | 02 க | ட | க | 03 வி |
| 04 சு | ர | ■ | 05 ழ் | யா |
| 06 வா | ■ | 07 தி | த் | யா |
| 08 ச | 09 த் | தி | ர | ம் |
| 10 ம் | மு | மு | ம் | ர |

## பட்டமளிப்பு விழா

(01ஆம் பக்க தொடர்ச்சி)

ஆகிய பட்டங்களைப் பெற்றவர்கள் இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டனர். அருட்பணியாளர்கள், பொதுநிலையினர் உட்பட 33 பேர் அந்நிகழ்வில் பட்டங்களைப் பெற்றனர் என்பது சிறப்பம்சமாகும். தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் செயலாளர் அருட்பணி. சுஜிதர் சிவநாயகம் அவர்கள் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இறைசெய்தியைப் பகிர்ந்து கொண்டமை சிறப்பம்சமாக அமைந்தது.



இந்த 33 பட்டமேற்பவர்களையும் 3 தொடக்கம் 4 வருடங்கள் நேரடியாகவும், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் எமது இறையியல் கல்லூரியின் ஆசான்கள் தயார்படுத்தியிருந்தனர்.



எமது சி.ஏ.சி.எம் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் இவர்களுக்கான சான்றிதழை வழங்கி வைத்து கௌரவித்தார். கிறிஸ்தவ இறையியல் கல்லூரி ஆளுநர் சபை உறுப்பினரும், பல்கலைக்கழகப் பேராசிரியருமான பேராசிரியர். ஏ. சி. தவறஞ்சிற் அவர்கள் பதக்கங்கள் அளித்து உவகை அளித்தார். கிறிஸ்தவ இறையியல் கல்லூரி ஆளுநர் சபைச் செயலாளர் பேராசிரியர். கலாநிதி. ஜே. பிறின்ஸ் ஜெயதேவன் அவர்கள் வந்தாரை உவப்புடன் வரவேற்றார். எமது சி.ஏ.சி.எம் முன்னாள் தலைவர் அருட்பணி. ரி. தேவநேசன் அவர்கள் விசேட செபம் செய்தார். மிகவும் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த இவ்விழா ஐக்கிய தேநீர் விருந்துடன் இனிதே நிறைவுபெற்றது.

## அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை


# உடுவில்

1819 ஆம் ஆண்டு வின்சிலோ, ஸ்போல்டிங், வூட்வேட், ஸ்கடர் ஆகிய நான்கு குருமாரும் அவர்கள் மனைவியரும் இரண்டாம் கட்ட அமெரிக்கன் மிசன் தொண்டர்களாக "இந்துஸ்" எனும் கப்பல் மூலமாக யாழ்ப்பாணத்திற்குப் பயணத்தை மேற்கொண்டனர். 8 மாதமும் 9 ஒன்பது நாட்களும் மேற்கொண்ட கடல் பயணத்தின் இறுதியில் இவர்கள் யாழ்ப்பாணத்தில் 17-02-1820 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைத்தனர். இவர்களில் வின்சிலோ தம்பதியினரும் ஸ்போல்டிங் தம்பதியினரும் குடும்பங்களாக உடுவிலில் மேற்படி திகதியில் தங்களுடைய பணிகளை ஆரம்பித்தனர். உடுவிலில் போர்த்துக்கேயரால் கட்டப்பட்டுப் பின்னர் ஒல்லாந்தரால் பாவிக்கப்பட்டு ஆங்கிலேயர் காலம் பராமரிப்பற்றுக் கிடந்த ஆலயமும் மிகப்பெரிய,



ஓலையால் வேயப்பட்ட மிசன் இல்லமும் பிரித்தானிய ஆட்சியாளர்களால் இவர்களுக்கு உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது. இவைகளினைப் பொறுப்பேற்றுக் கொண்ட வின்சிலோ, ஸ்போல்டிங் தம்பதியினர் கிறிஸ்தவ நற்செய்திப்பணிகளிலேயும், பெண்கல்வி மற்றும் அகராதி உருவாக்கப் பணிகளிலேயும் சமூக மேம்பாட்டுப் பணிகளிலேயும் அதிகமாக பாடுபட்டு உழைத்தனர்.

வண. பி. சி. மெக்ஸ் ஐயர் யாழ்ப்பாணம் வந்தபோது தாம் "இங்கு எழுத வாசிக்கத் தெரிந்த இரண்டு பெண் பிள்ளைகளை மட்டும் அளவெட்டியிலும், உடுப்பிட்டியிலும் கண்டதாக" எழுதியிருக்கின்றார். உடுவிலிலே பணி செய்யத் தொடங்கிய வண. மைரன் வின்சிலோ அவர்களுடைய மனைவி திருமதி. ஹரியற் வின்சிலோ அவர்கள் பெண்பிள்ளைகள் கல்வி கற்க வேண்டும் என்பதிலே



அதிகம் அக்கறை கொண்டு செயற்பட்டார். இதன் விளைவாக இவர்கள் உடுவிலே 1824 ஆம் ஆண்டு பெண்பிள்ளைகள் தங்கிருந்து கல்வி கற்கும் ஒரு பெண்கள் விடுதிப் பாடசாலையை ஆரம்பித்தனர். இதுவே ஆசியாவில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட விடுதிப் பெண்கள் பாடசாலையாக அமைந்தது.

உடுவில் தேவாலயத்தில் 02-10-1820 ஆம் ஆண்டில் முதலாவது திருவிருந்தினை முறைப்படி வண. வின்சிலோ, வண. ஸ்போல்டிங், அவர்கள் மனைவியர் மற்றும் மலையப்பர் என்னும் உடுவிலைச் சேர்ந்தவர்கள் அடங்கிய ஐவர் அனுசரித்தனர். இதுவே உடுவிலே அனுசரிக்கப்பட்ட முதலாவது திருவிருந்தாகும். தேவாலயத்துக்கு அருகிலிருந்த பாடசாலையில் கல்விகற்ற மாணவியர் தேவாலயப் பணிகளில் கிரமமாக ஈடுபட்டனர். மிசன் வீட்டில் தங்கியிருந்த மிசன் தொண்டர்கள் பெண்கள் கல்வியை ஊக்கப்படுத்தப் பலவிதமான முயற்சிகளை எடுத்தனர். 1831 ஆம் ஆண்டு ஏனைய சபைகள் போல உடுவில் சபையும் ஓர் தனி நிர்வாகத்தில் தனித்து இயங்க ஆரம்பித்தது. அமெரிக்கன் மிசனின் கீழ் பணியாற்றிய உடுவில் ஆலயம் பின்னர் தென்னிந்திய ஐக்கிய சபாசங்கத்தின் ஆளுகைக்குள்ளும் 1947க்குப் பின் தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் ஆளுகைக் குள்ளும் நிர்வாகிக்கப்பட்டுத் தற்போது மறுபடியும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் ஆலயமாக நிர்வாகிக்கப்படுகின்றது.

## முன்பள்ளி ஆசிரியருக்கான பயிற்சிப் பட்டறை - வன்னி

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை வன்னிப் பிராந்திய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி பட்டறை ஜுன் மாதம் 21ஆம், 22ஆம் திகதிகளில் முறுகண்டி முன்பள்ளியில் நடைபெற்றது. இதில் 30 ஆசிரியர்கள் கலந்து





கொண்டனர். மொழி விருத்தியில் எழுத்து பொறிமுறையும், ஓட்டிசம் பிள்ளைகளை இனம் காணுதல் போன்ற பயிற்சிகளும் அத்தோடு ஆசிரியர்களுக்கான உள சுற்றுப்படுத்தல் பயிற்சியும் நடைபெற்றது. இதன் வளவாளராக கிளி/ மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் திரு. ப. சசிதரன் அவர்களோடு இணைந்து ஆசிரியர் அபிராமி மற்றும் திரு. க. யுவராஜா முதன்மை ஆசிரியர் உளவளத்துறை கிளிநொச்சி செரண்டிப் நிறுவன பயிற்சியாளர்கள் ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர். இதன்போது திருச்சபையின் தலைவர், உப தலைவர், வன்னிப் பிராந்திய குரு முதல்வர், முறுகண்டி திருச்சபை குருவானவர், வவுனியா திருச்சபை குருவானவர் மற்றும் சேவைத்திருப்பணிமன்ற உதவி இயக்குனர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இப்பயிற்சி



பட்டறையினை வன்னி பிராந்திய இணைப்பாளர் கொலின் கனகேஸ்வரி சிறப்பாக வழி நடத்தினர்.

## கருத்தரங்குகள்

(01ஆம் பக்க தொடர்ச்சி)

(Rethinking Ministerial Commitment) எனும் தலைப்பிலும் இக்கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கினை நிகழ்த்துவதற்காக மதுரை



தமிழ்நாடு இறையியல் கல்லூரி தொடர்பாடல் துறையின் விரிவுரையாளர் அருட்கலாநிதி பீற்றர் சிங் அவர்கள் வருகை தந்திருந்தார். கிறிஸ்தவ இறையியல் கல்லூரியினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இக்கருத்தரங்கில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை, கத்தோலிக்க திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை, பப்டிஸ்த திருச்சபை, தென்னிந்திய திருச்சபை, சுயாதீன திருச்சபைகள் போன்றவற்றின் அருட்பணியாளர்களும் பொதுநிலையினரும் பங்குபற்றியிருந்தார்கள். இரண்டு நாள் கருத்தரங்கிலும் ஏறத்தாழ 60க்கும் மேற்பட்டோர் பங்குபற்றியமை சிறப்புக்குரியதே.

# திருச்சபைத் தலைவருடைய

(01ஆம் பக்க தொடர்ச்சி)

காண்பிக்கின்றார். அங்கிருந்து எல்லோரும் மோவாப் மலைக்கு வருகின்றனர். மோவாபின் சமவெளிகளிலே புதிய ஒரு அத்தியாயம் ஆரம்பமாகின்றது.

கடவுள் நூனின் குமாரனாகிய யோசுவாவை அழைத்து, "நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்திற்குப் போங்கள்." என்று கட்டளையிட்டார். அவ்வேளையிலே மக்கள் மத்தியிலே சோர்வு காணப்பட்டது: யோசுவாவின் மனதிலும் தயக்கம் காணப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்திலே கர்த்தர் யோசுவாவை நோக்கி "நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை: நான் மோசேயோடு இருந்ததுபோல, உன்னோடும் கூடவிருப்பேன். நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று நம்பிக்கையினையும் தைரியத்தினையும் கொடுத்தார்.

"என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப் பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலம் கொண்டு திடமனதாயிரு: நீ போகுமிடமெல்லாம் புத்திமானாக நடந்து கொள்ளும்படிக்கு அதைவிட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக. இந்த நியாயப் பிரமாணப் புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின்படி எல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக. **அப்பொழுது** நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய். **அப்பொழுது** புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்." இங்கு இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும். ஒன்று, கடவுள் எப்போதும் எல்லோருக்கும் ஆசீர்வாதங்களையும் வழிநடத்துதல்களையும் நிறைவாகக் கட்டளையிடுகின்றவர். இரண்டாவது, அதற்கு நிபந்தனைகளும் உண்டு. பொதுவாக எல்லோரும் முதலாவது விடயத்தினை உள்வாங்கிக் கொண்டு, இரண்டாவது விடயத்தினை நினைத்துப் பார்ப்பதுகூட இல்லை. ஆசீர்வாதங்கள் கிடைக்கும்: ஆனால் அதற்கு நிபந்தனைகளும் உண்டு. திருமறையிலே இருக்கின்ற எல்லா வசனங்களுமே நேரடியாகவோ மறைமுகமாகவோ இவ்வாறான உண்மையினை எடுத்தியம்பி நிற்கின்றன. எனவே, திருமறையில் காணக்கிடைக்கும் அனைத்து வசனங்களுமே நிபந்தனையுடன் கூடிய வசனங்கள். (Conditional Words)

புதிய ஏற்பாட்டிலும் ஒரு வசனத்தினைத் தொட்டுக் காண்பிக்க விரும்புகின்றேன். யோவான் நற்செய்தி நூல் பதினைந்தாம் அதிகாரம், நான்காம் வசனத்தின் முற்பகுதி "என்னில் நிலைத்திருங்கள்: **அப்பொழுது** நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" ("Dwell in me, as I dwell in you. No branch can bear fruit by itself, but only if it remains united with the wine no more can bear fruit, unless you remain united with me") பவர் மொழிபெயர்ப்பிலே இந்த "**அப்பொழுது**" என்பது காணப்படவில்லை. தமிழிலே இது தொக்கு நிற்கின்றது என்பார்கள். தொடர்ந்தும் அவ்வதிகாரத்திலே ஏழாம் வசனத்திலே நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் **நிலைத்திருந்தால்** நீங்கள் கேட்டுக் கொள்ளுவது எதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும். நிலைத்திருக்காவிட்டால் இல்லை. யோசுவாவுக்குக் கர்த்தர் "இந்த நியாயப் பிரமாணப் புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக." என்று கூறியுள்ளார். நமது பாடல் புஸ்தகத்தின் 357 ஆம் கீர்த்தனையின் நான்காவது சரணம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

"முறையாகத் திருமறையைப் பயின்றிடுவோம்,
அதன் முழுப்பொருளை அறிந்திடவே முயன்றிடுவோம்:
நிறைவான வாழ்வதனை அடைந்திடவே – மறை
நிழல் படியும் பாதையிலே நடந்திடுவோம்"

இன்றைய வாழ்க்கை என்பது பொய்மை நிறைந்த ஒரு உலகத்துக்குள்ளேயே நடைபெறுகின்றது. உண்மைக்கும் பொய்மைக்கும் வேறுபாட்டினைக் கண்டு கொள்ளுவது மிகக்கடினமாக உணரப்படுகினறது. மக்களால், அசல் எது போலி எது என்று அடையாளம் கண்டு கொள்ளமுடியாதுள்ளது. பரந்துபட்ட வியாபார உலகிற்குள்ளே திருச்சபை பயணிக்க வேண்டியுள்ளது. காலத்துக்குக் காலம் திருச்சபை பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. இந்தச் சவால்கள் இடத்துக்கிடம் வேறுபட்டதாயும் காணப்படுகின்றன. இன்று இலங்கையின் தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் பல்வேறு புதிய புதிய பிரச்சினைகள் பரிணாமம் பெற்றுள்ளன. யுத்தத்திற்குப் பின்னர் அமைதியாக வாழலாம் என்று எண்ணிய மக்கள், என்றுமே எதிர்பாராத புதிய புதிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். கலாச்சார சீரழிவு, மிதமிஞ்சிய போதைவஸ்துப் பாவனை, கையடக்கத் தொலைபேசிகளால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள், இளம் குடும்பங்களின் சீரழிவு, வெளிநாட்டு மோகம் காரணமாகப் பலதரப்பட்ட மக்களுடைய பாரிய வெளியேற்றம், வன்முறையான சொல்லாடல் உட்பட்ட வன்முறைக் கலாசாரம் என்று பட்டியலே நீண்டு செல்லுகின்றது.

இந்தச் சூழலிலே திருச்சபை தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, நோய்வாய்ப்பட்ட சமூகத்துக்குப் பிணி தீர்க்கும் ஒரு சமூகமாக வாழ்ந்து பணியாற்ற அழைக்கப்படுகின்றது. இலங்கை வாழ் தமிழ் திருச்சபைக்குப் பெரியதொரு பொறுப்புண்டு. இலங்கையில் வாழுகின்ற அனைத்து பௌத்தர்களும் சிங்களவர்களே. அனைத்து இந்துக்களும் தமிழர்களே. ஆனால் சிங்களவர்களுக்குள்ளும் கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர். தமிழர்களுக்குள்ளும் கிறிஸ்தவர்கள் இருக்கின்றனனர். இருபகுதியினருக்குள்ளும் உறவுநிலையினைக் கொண்ட கிறிஸ்தவர்கள் ஒற்றுமைக்கான பெரிய காரியங்களைச் செய்ய முடியும். அவ்வாறு செய்கின்ற வாய்ப்பு கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமே உண்டு. இது போன்ற வாய்ப்புக்களைப் பெற்றிருக்கின்ற எந்த சமூகமும், அந்த வாய்ப்புக்களைத் தவற விடக் கூடாது. அது சிறிய சமூகமாகவிருக்கலாம், பெரிய சமூகமாகவிருக்கலாம். "மனுசனே நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்: நியாயம் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாக நடப்பதையல்லாமல் வேறே எதைத் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்."என்று கேட்கும் மீகா தீர்க்கதரிசியினுடைய சத்தத்திற்கும் செவிமடுக்க நாம் அழைக்கப்படுகின்றோம். வாழ்க்கை என்பது அதிசயம்: வாழ்வதும் உலகில் ஒருமுறை. அதனை அர்த்தமுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் வாழ்ந்துமுடிக்க ஆண்டவருடைய பாதத்தில் ஒப்புக் கொடுப்போம். இறையாசியினையும் இறைபெலனையும் வேண்டிநிற்போம்.

**"உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர் மேல் நம்பிக்கையாயிரு: அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்."**

**அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன்,**
**தலைவர், அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை.**

# Prayers for the Plain Man

## - William Barclay

## Second Day

### In the Morning

O god our Father, bless us and keep us all through today.
At our work, us diligent, ever showing ourselves to be workmen who have no need to be ashamed.
In our pleasure, help us to find delight only in such things as bring no regrets to follow,
In our homes, make us kind and considerate, ever trying to make the work of others easier, and not harder.
In our dealings with ourselves, make us honest to face the truth.
And in every moment of this day make us ever to remember that You, God, see us, and that in you we live and move and have our being. So grant that we may do nothing which would bring shame to ourselves, grief to those who love us, and sorrow to You: through Jesus Christ our Lord. Amen.



### In the Evening

O God, our father, who bid us to pray for all men, we remember at evening time those who specially need our prayers.
Bless those who are Lonely, and who feel their loneliness worst of all at evening time.
Bless those who are sad, and who at evening feel most of all the absence of some one whom they loved, and lost awhile.
Bless those who are ill, and who will not sleep this night; and those who this night will keep awake to ease the sufferer`s pain.
Bless those who have no home, and no family Circle to call their own.
O God, who are everywhere present, bless this our home, and help us to remember that Jesus is always our unseen guest,and so help us never in this place to do or to say anything which would make Him sad.
Keep us this night in the dark hours,and grant us kindly sleep, and make us to feel around us and about us the chasp of everylasting arms, which will never let go of us. Amen

# பிராந்திய நிகழ்வுகள்

## வாலிபர் விளையாட்டு விழா-2024

வன்னி பிராந்தியம்



அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் வன்னிப் பிராந்திய வாலிபர் பணியின் இணைப்பாளர் அருட்பணி ரி. சுசேந்தன் தலைமையிலும் வாலிபர் பணிக்குழுவின் ஒழுங்கமைப்பில் முறுகண்டி இந்துபுரம் பொது மைதானத்தில் வாலிபருக்கான விளையாட்டு விழா 29-06-2024 அன்று சிறப்பாக நடைபெற்றது.



இதிலே ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியும், இருபாலருக்குமான கரப்பந்தாட்டம் மற்றும் அஞ்சல் ஓட்டப் போட்டிகள் என்பன நறைபெற்றன. இப்போட்டியிலே அக்கராயன், ஜெயபுரம், கோணாவில், முறுகண்டி, மறவன் குளம், கிளிநொச்சி சேர்ந்த திருச்சபை வாலிபர்கள் பங்கு பெற்றினர். இப்போட்டியானது வரவேற்புரை, கொடியேற்றல், மங்கள விளக்கேற்றல் மற்றும் பிரதம அதிதியின் ஆசியுரையுடன் போட்டிகள் ஆரம்பமானது.

இந்த நிகழ்விலே பிரதம அதிதியாக அருட்பணி. எம். ஜெயானந்தராசா (CACM வாலிபர் பணி இணைப்பாளர்) அவர்களும், கௌரவ அதிதிகளாக திரு. எஸ். திருச்செல்வம் (AR AMMA CIVIL CONSTRUCTION), திரு. ஆர். சுஜந்தன் (CACM ஊடக பிரிவு) ஆகியோருடன் அருட்பணி. எஸ். ஆர். சதீஸ்குமார், அருட்பணி. டேவிட்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பிராந்திய மன்றின் வருடாந்தக் கூட்டத்தொடர்

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் வன்னிப் பிராந்தியத்தின் வருடாந்த கூட்டத்தொடர் 23.03.2024



அன்று வவுனியா திருச்சபையில் சிறப்புடன் நடைபெற்றது. திருவிருந்து வழிபாடுடன் ஆரம்பமான இக் கூட்டம் பிராந்தியத் தலைவர் அருட்பணி.



ஆர். ஜோன் செல்வம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதன்போது அறிக்கை, கணக்கறிக்கை என்பன அதன்தன் கூட்டுநர்களால் வாசிக்கப்பட்டு, பிழைகள் திருத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு, புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## யாழ் பிராந்திய மன்றின் வருடாந்தக் கூட்டத்தொடர்

சி.ஏ.சி.எம் யாழ் பிராந்தியத்தின் 17வது வருடாந்தக் கூட்டத்தொடர் 16.03.2024இல் கிறிஸ்தவ இறையியற் கல்லூரி மண்டபத்தில் பிராந்தியத் தலைவர் அருட்பணி. எம். டி. போல் சுரேஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **“மாறிடும் உலகு - மாறாதவர் கடவுள்”**எனும் பொருளில் நடைபெற்ற இக் கூட்டத் தொடரில் அருட்பணி. ஏ. டேவிட் நிருசிகன் அவர்கள் கடவுளுடைய செய்தியினைப் பகிர்ந்துகொண்டார். திரு. த. யூதராஜா மற்றும் அருட்பணி. எஸ். சுதாசினி ஆகியோர் பதிவுச் செயலாளர்களாகச் செயற்பட்டனர். ஆச்சிரமத்தின் சார்பில் ஜெரோம் அண்ணன் வாழ்த்துரையைப் பகிர்ந்துகொண்டு கூட்டமும் தெரிவுகளும் சிறப்பாக நடைபெற வாழ்த்தினார்.

கர்த்தருக்குள் நித்திரை அடைந்த திருமதி. அருளானந்தம் கிருபைநாயகி (சத்தியபுரம்) அருட்பணி. ஏ. வி. இயேசுதாசன் ஆகியோருக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. குறிப்பாக




அருட்பணி. ஏ. வி. இயேசுதாசன் போதகர் குறித்த பிரேரணையை அருட்பணி. டி. எஸ். மதியாபரணம் அவர்கள் ஏறெடுத்தார். அருட்பணி. எம். கெனடி அவர்கள் ஜெபத்தில் வழி நடாத்தினார்.

தொடர்ந்து பிராந்தியத் தலைவர் அவர்கள் தமது தலைமையுரையில் கடவுள் மாறுபவர் அல்ல, கடவுளின் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு அனைவரையும் பயன்படுத்துபவர், கடவுளின் திட்டம் ஒருபோதும் மாறாதது எனவும் திருச்சபை ஆகிய நாம் கடவுளின் சித்தத்தின்படி



நடக்க அழைக்கப்படுகின்றோம். ஒற்றுமையுடனும் அர்ப்பணிப்புடனும் பயணிப்போம் என்றும் அறைகூவல் விடுத்தார்.

இறுதி செயற்குழு அறிக்கை, கடந்த வருட பொதுக்கூட்டத் தொடரின் அறிக்கை, சமயக்கல்விக்குழு அறிக்கை, வாலிபர்பணி அறிக்கை, பெண்கள் ஐக்கிய அறிக்கை, ஊழியர் சங்க அறிக்கை, நற்செய்திபணிக்குழு அறிக்கை, கணக்கறிக்கை என்பன அதன்தன் கூட்டுநர்களால் வாசிக்கப்பட்டு, பிழைகள் திருத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. தொடர்ந்து துணைமன்ற உறுப்பினரகள் தெரிவு செய்யப்பட்டனர். அவ்வாறே, சமயக் கல்விக்குழுவுக்கு அருட்பணி. எஸ். சுதாசினி அவர்களும் வாலிபர் பணிக்குழுவுக்கு அருட்பணி. ஏ. கமலகுமாரன் அவர்களும், பெண்கள் ஐக்கியத்துக்கு திருமதி. டொறின் போல் சுரேஸ் அவர்களும், நற்செய்திப் பணிக்குழுவுக்கு அருட்பணி. என். கெனடி அவர்களும் முது வாலிபர் பணிக்குழுவுக்கு அருட்பணி. எம். ஜெயானந்தராசா அவர்களும், சேவைத் திருப்பணிமன்றுக்கு அருட்பணி. டி. எஸ் மதியாபரணம் அவர்களும் சொத்து மற்றும் கணக்காளர் குழுவுக்கு திருமதி. நளாயினி அவர்களும் கூட்டுநர்களாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து பிராந்திய செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. அருட்பணி. எம். டி. போல் சுரேஸ் (தலைவர்), திருமதி. ஆர். ஞானதீபம் (செயலாளர்), திருமதி. நளாயினி (பொருளாளர்) ஆகியோருடன் அருட்பணி. எம். கெனடி, அருட்பணி. டி. எஸ். மதியாபரணம், அருட்பணி. ஜே. அன்ரனி சுதாகர், திரு. ஜீசஸ்கிங், திரு. கனிஸ்ரன், திருமதி. த. விஜயவாணி, திருமதி. தயாபரன், திரு. த. யூதராஜா, திரு. எஸ். சத்தியன், செல்வி. எம். சிவானி, திருமதி. ரி. தர்சினி மற்றும் திரு. எபினேசர் சாந்தகுமார் ஆகியோர் செயற்குழு அங்கத்தவர்களாயினர்.



தொடர்ந்து 16.03.2024 அன்று யாழ் பல்கலைக்கழகத்தின் 38வது பட்டமளிப்புவிழாவில் பட்டம் பெற்ற அருட்பணி. எம். ஜெயானந்தராசா அவர்களுக்கு அருட்பணி. ஏ. கமலகுமரன் அவர்கள் மாலை அணிவித்துக் கௌரவித்தார். இவ்வாறு இக் கூட்டத்தொடர் இனிதே நடைபெற்று, நிறைவு பெற்றது.

# திடப்படுத்தல் வழிபாடுகள்

## கிறிஸ்து அரசர் ஆலயம் கிளிநொச்சி

31-03-2024, உயிர்ப்பின் ஞாயிறு அன்று காலை 05 மணிக்கு திடப்படுத்தல் வழிபாடானது சாட்சியின் மெழுகுவர்த்திப் பவனியுடன் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் முன்றலிலிருந்து புறப்பட்ட பவனியுடன் ஆரம்பமானது. ஏ9 வீதி வழியாகப் பயணித்த பவனி ஆலயத்தை அடைந்ததும் திடப்படுத்தல் வழிபாடானது திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் தலைமையில் அருட்பணி. எஸ். ஜ. ஆனந்தராஜன் மற்றும் சபைக்குரு அருட்பணி. ஜெ. ஜெயசீலன் அவர்களின் உதவியுடன் நடைபெற்றது. திருச்சபையின் முன்னாள் அருட்பணியாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ், அருட்பணி. ஜெ. ஜெயசீலன் அருட்பணி. எஸ். ஜ. ஆனந்தராஜன் ஆகியோர் பின்வரும் திடப்படுத்தல் பெறுபவர்களை தயார்ப்படுத்தியிருந்தனர்.

01. கிறேஸ் இயேசுதா சிவஞானம்
02. சலோமி சிவசுதா சிவஞானம்
03. டன்சி யோசுதா சிவஞானம்
04. டிலுக்ஸ் கிளின்றன் சிவகுமார்
05. நிலுக்ஸ் கிளின்றன் சிவகுமார்
06. பிரியாளினி விஜயராசன்
07. பிறான்கிளின் அருள்நதாஸ் பிரகாஷ் திலவழகன்
08. சானிலா உஜின்நதன்
09. ஜொப்றின் தானியா நந்தன்
10. டிசன்றிகா றஜதீபன்
11. கலைப்பிரியன் உதயகுமார்
12. கலையமுதன் தியாகராஜன்
13. கனிநிலா தியாகராஜன்
14. திருமதி. றேனுகா டிலக்சன்
15. காவியா தர்மபாலா
16. அக்சயா தர்மபாலா
17. சாதுரியன் தர்மபாலா
18. கிரிஸ்றினா யோனத்தான் மனோரஞ்சன்
19. அபிஷாந் யோனத்தான் மனோரஞ்சன்
20. நிருசா றவிச்சந்திரன்



20 பேர் திடப்படுத்தல் பெற்ற இவ் வழிபாட்டில் திருச்சபைத் தலைவரின் பாரியார் திருமதி. மதி தேவகுணானந்தன், திருச்சபையின் உப தலைவர் திரு. ஜ. அருள்றோகான், அவருடைய பாரியார் திருமதி. ஜெயந்தி அருள்றோகான், காவிரிக் கலாமன்ற இயக்குநர் அருட்கலாநிதி. றி. எஸ். ஜோசுவா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். திடப்படுத்தல் பெற்ற 20 பேருடைய குடும்ப உறவுகளால் ஒழுங்கு செய்யப்பட்ட காலை ஆகாரத்தில் அனைவரும் கலந்து கொண்டனர்.

## தெல்லிப்பளை அமெரிக்கன் மிசன் தேவாலயம்

கடந்த ஏப்ரல் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திடப்படுத்தல் பெறும் 6 பிள்ளைகள் தெல்லிப்பளை மிசன் இல்லப் பகுதியில் இருந்து *"போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனை"* என்ற துதிப்பாடலுடன் பவனியாக ஆலயத்துக்குள்ளே அழைத்து வரப்பட்டனர்.

திடப்படுத்தல் வழிபாட்டினையும் திருவிருந்து வழிபாட்டினையும் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் தலைமை தாங்கி நடாத்தி **"புதுவழியும் மெய்திராட்சையும் இயேசு கிறிஸ்து"** (Jesus the new way and true wine) என்ற தலைப்பிலே இறைசெய்தியினை பகிர்ந்து கொண்டார்.

சபைக்குரு அருட்பணி றி. ஈ. அசோக்குமார் அவர்கள் திடப்படுத்தல் பெறும் பிள்ளைகளைப் பயிற்றுவித்து பீடத்தின் முன் நிறுத்தினார். பின்வரும் 06 பிள்ளைகள் அன்றைய தினம் திடப்படுத்தலின் வழியாக திருச்சபையில் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் ஆண்டவரின் இறுதி இராப் போசனத்திலே கலந்து கொள்ளும் சிலாக்கியத்தையும் பெற்றுக்கொண்டனர்.

1. பிரதீப் யோகநாதன்
2. சுப்பிரமணியம் விஜய்காந்
3. அனிஸ்ரன் ஜெனிற்றா
4. சசிகுமார் ஜெருசியா
5. உதயக்குமார் ஜஸ்வினி
6. ஆனந்தராசா ஆரணியா



இதன் பின்னர் திடப்படுத்தல் பெற்ற பிள்ளைகளின் குடும்பத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட காலை ஆகாரத்தில் அனைவரும் கலந்து கொண்டனர்.

## நல்லாயன் ஆலயம் உடுவில்

கடந்த 02-06-2024 ஞாயிற்றுக்கிழமை காலை 07:30 மணிக்கு அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் உடுவில் நல்லாயன் தேவாலயத்தில் 03 பேர் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களால் திடப்படுத்தல் பெற்று திருச்சபையின் முழு அங்கத்தவர்களாக இணைத்து கொள்ளப்பட்டனர். இவர்களைச் சபைக்குரு அருட்பணி. றி. டானியல் ரஞ்சித் அவர்கள் தயார்படுத்தி திடப்படுத்தல் பெற்று கர்த்தரின் மந்தையில் இணைத்துக் கொள்ளும்படி முன் நிறுத்தினர். திருச்சபையின் தலைவர் இறைசெய்தியினை **"ஓய்வுநாளின் ஆண்டவர்"** எனும் தலைப்பில் பகிர்ந்து கொண்டார். பின்வருவோர் திடப்படுத்தல் பெற்றுத் திருச்சபையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

01. டானியல் ரஞ்சித் டான் அபினா
02. எடி அறேன் எட்வின் அனோறின்
03. ராஜரட்ணம் ஜஸ்டின் பவுயன்



இதன் பின்னர் திடப்படுத்தல் பெற்ற பிள்ளைகளின் குடும்பத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட காலை ஆகாரத்தில் அனைவரும் கலந்து கொண்டனர்.

திடப்படுத்தல் பெற்று கர்த்தரின் பந்தியில் இணைக்கப்பட்டவர்களை இறை நம்பிக்கையில் மென்மேலும் வளர வாழ்த்துகிறோம்.

## விளையாட்டு விழா (07 ஆம் பக்க தொடர்ச்சி)

நிருசிகன், அருட்பணி. கலாவதி பிரதீபன், அருட்சகோதரன். பி. பிரசாந், திருமதி. எம். துர்காதேவி (CACM நிர்வாக உறுப்பினர்), திரு. யே. கலிங்டஸ் (யாழ் பிராந்திய வாலிபர் தலைவர்) மற்றும் திருச்சபை விசுவாசிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



முதல்முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட இவ் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற பலரும் உதவி கரங்கள் நீட்டியிருந்தனர். விசேடமாக விழாவை ஒழுங்கமைப்பதற்கு வன்னிப் பிராந்திய நிர்வாகமும், வெற்றி கிண்ணங்களைப் பெற திரு. எஸ். திருச்செல்வம் அவர்களும், விழாவில் பங்குகொண்டோருக்கான ஐக்கிய மதியவுணவை வழங்க திருமதி. எம். நிஷா அவர்களும், களத்தினை ஆயத்தப்படுத்துவதில் திரு. யே. லக்சிதரன் அவர்களும் உதவியிருந்தனர். மேலும் இது போன்ற வாலிபர்களை ஒன்றிணைக்கும் பணிகளை மென்மேலும் செய்திட உதயதாரகையின் வாழ்த்துக்கள்.



இப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகள் மற்றும் வீரர்களின் விபரம் பின்வருமாறு

**மென்பந்து கிரிக்கெட் (ஆண்கள்)**
1. முறிகண்டி திருச்சபை
2. சமாதானபுரம் திருச்சபை
சிறந்த வீரர் – யே.தனுசன் (முறிகண்டி திருச்சபை)

**கரப்பந்து (ஆண்கள்)**
1. சமாதானபுரம் திருச்சபை
2. ஜெயபுரம் திருச்சபை
சிறந்த வீரர் – ரூபன் (அக்கரையான்குளம் திருச்சபை)

**கரப்பந்து (பெண்கள்)**
1. முறிகண்டி திருச்சபை
2. கோணாவில் திருச்சபை
சிறந்த வீராங்கனை – சமர் முகில் (முறிகண்டி திருச்சபை)

**அஞ்சலோட்டம் (ஆண்கள்)**
1. ஜெயபுரம் திருச்சபை
2. சமாதானபுரம் திருச்சபை
3. முறிகண்டி திருச்சபை

**அஞ்சலோட்டம் (பெண்கள்)**
1. முறிகண்டி திருச்சபை
2. கோணாவில் திருச்சபை
3. சமாதானபுரம் திருச்சபை

**ஒரு மனுஷன் பிரியும் போது**
தாய் அழுதால்
**அவன் நல்ல மகன்**
மனைவி அழுதால்
**அவன் நல்ல கணவன்**
பிள்ளைகள் அழுதால்
**அவன் நல்ல தகப்பன்**
சமூகமே அழுதால்
**அவன் ஒரு நல்ல மனிதன்**

## 12வது வருடாந்த பேரவைக்...

(01ஆம் பக்க தொடர்ச்சி)

திரு. என். டி. செல்வராசா
திருமதி ஜெயசிங்கம் (போதகரம்மா)
திருமதி. விஜயலக்ஷ்மி தேவராஜா(போதகரம்மா)

ஆகியோரின் வாழ்வுக்கும் பணிக்குமாக இறைவனுக்கு நன்றி செலுத்திப் பேரவையின் முன்னாள் தலைவர் அருட்பணி ரி. தேவநேசன் அவர்கள் ஜெபத்தில் வழி நடத்தினார்.

பேரவையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் தலைமையுரையை ஆற்றினார். அத்துடன் பேரவைக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று அமர்ந்தார். பேரவைக் கூட்டத்தின் பதிவுச் செயலாளராக அருட்பணி. சுதாசினி சுதாகரன் அவர்களும் சமூகசோதி தம்பிராஜா யூதராஜா அவர்களும் தெரிவுச் செய்யப்பட்டு கூட்ட நிகழ்வுகளை பதிவிட்டுத் தொகுத்தனர். பேரவைச் செயலாளரால் 12வது வருடாந்த பேரவைப் கூட்டத்திற்கான அங்கத்தவர்களின் வரவு பதிவிடப்பட்டது. இதன் பிரகாரம் வாக்குரிமையுள்ள அங்கத்தவர்களில் 84 வீத உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர். 84 வீத அங்கத்தவர்கள் வருகை தந்தமையானது பேரவைக்கான பெரும்பான்மை என்பதை அறிவித்த பேரவைத் தலைவர் பிதா



குமாரன் பரிசுத்தாவியானவரின் பெயரினால் 12வது வருடாந்த பேரவைக் கூட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். பிராந்தியங்களின் அறிக்கைகள், கணக்குகள், துணைமன்ற அறிக்கைகள், நிறுவன அறிக்கைகள், செயற்குழுக் கூட்ட அறிக்கைகள், 11வது வருட பேரவை அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டுத் திருத்தங்கள், சேர்க்கைகள், கருத்துப்பரிமாற்றங்கள், வாதப்பிரதிவாதங்களின் பின்னர் நன்றிகளுடனும் பாராட்டுக்களுடனும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

புதிய வருடத்தில் செயற்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்கள், விடயங்கள், ஆன்மீக செயற்பாடுகள், பொருளாதார மேம்பாடு, பிள்ளைகள், வாலிபர்கள், பெண்கள் பணிகளில் துரிதமான ஆன்மீக சமூகச்செயற்பாடுகள் குறித்த கருத்துப்பரிமாற்றங்கள், செயற்பாட்டுக்கான முன்மொழிவுகள், பிரேரணைகள் சிறப்புக் கலந்துரையாடல்களின் தேவைகள் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டது சிறப்பம்சமானது.

புதிய ஊழியர் அறிமுகமும் ஏற்றுக் கொள்ளுதலும் இடம் பெற்றது. இதன் பிரகாரம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் அதிபரினால் சகோதரன் பி. பிரகாஸ் அவர்கள் புதிய ஊழியராக உருவாக்கம் பெற்று பணிகளில் ஈடுபட தகுதியுடையவராக உள்ளார் என அறிமுகப்படுத்த அவரை பேரவை ஏற்றுக்கொண்டது.

2024ம் 2025ம் ஆண்டுகளுக்கான ஆளுனர் சபைகள், நிர்வாகங்கள், குழுக்கள் ஆகியவற்றுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவை பின்வருமாறு:

### குழுக்கள், ஆளுனர் சபையும் கூட்டுனர்களும்

**1. நிதிக்குழு**
திரு. என். கே. ரமேஸ்குமார் (பொருளாளர்)

**2. ஊழியர் தகுதி காண் குழு**
அருட்பணி. ஏ. கமலக்குமாரன் (அதிபர் சிரிஎஸ்)

**3. உதயதாரகைக் குழு**
அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் (செயலாளர்)

**4. சிறுவர் மற்றும் சமயக்கல்விகுழு**
அருட்பணி. ரி. டானியல் றஞ்சித்

**5. நற்செய்தி பணிக் குழு**
அருட்பணி. ஆர். ஜோன் செல்வம்

**6. வாலிபர் பணிக் குழு**
அருட்பணி. எம். ஜெயானந்தராசா

**7. பெண்கள் ஐக்கிய பணிக்குழு**
அருட்பணி. எஸ். சுதாசினி

**8. சமாதானத்திற்கும் நீதிக்குமான குழு**
அருட்பணி. பி. ராஜன் றொகான்

**9. சட்ட ஆலோசனை மன்று**
அருட்பணி. ரி. தேவநேசன் (முன்னாள் தலைவர்)

**10. யாப்புக்குழு**
அருட்பணி. ஜே. அன்ரனி சுதாகர்

**11. இடர் முகாமைத்துவக் குழு**
திரு. என். கே. ரமேஸ்குமார் (பொருளாளர்)

**12. நிதித் திட்டமிடல் மற்றும் முகாமைக்குழு**
திரு. என். கே. ரமேஸ்குமார் (பொருளாளர்)

**13. மேற்படிப்புக்கள் மற்றும் கல்விக்குழு**
திரு. ஐ. அருள்றோகான் (உபதலைவர்)

**14. உள்ளகக் கணக்காய்வுக்குழு**
திரு. ஜெ. ஜீவரூபன்

**15. ஊழியர் இடமாற்றக் குழு**
அருட்பணி. வி. ராஜ்குமார்

**16. கிறிஸ்வ இறையியல் கல்லூரி ஆளுனர் சபை**
அருட்பணி. ஏ. கமலக்குமார் (அதிபர் சி.ரி.எஸ்)

**17. பரி யோவான் தொழில்பயிற்சி நிலைய ஆளுனர் சபை**
திரு. ஐ. அருள்றொகான் (உப தலைவர்)

**18. சேவைத் திருப்பணி மன்ற சேவைக்குழு**
திரு. பிரவின் யோசெப்

ஆகிய குழுக்கள் துணைமன்றங்கள், ஆளுனர் சபைக்கான உறுப்பினர்களும் கூட்டுனர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதேபோல் 2024ம் மற்றும் 2025ம் ஆண்டுக்கான புதிய செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. தலைவர், உபதலைவர், செயலாளர், மற்றும் பொருளாளர் தவிர்த்து 19 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

**யாழ் பிராந்தியம்**
அருட்பணி ஜீ.டி. மைனசீலன்
சமூகசோதி ரி. யூதராஜா
செல்வி. கே. இந்துகா
செல்வி எம் சர்மிலா

**வன்னிப்பிராந்தியம்**
அருட்பணி வி. டேவிற் நிருசிகன்
திரு. ரி. அருள்முருகன்
திருமதி. எம் துர்க்காதேவி
திரு. பி. சிந்துஜன்

**கிழக்குப்பிராந்தியம்**
அருட்பணி. நிவில் ரூபராஜ்
திரு. டேவிட் ஜெகநாதன்
திருமதி. கே. குகவதனி
செல்வி கே. சுஜானி

**கொழும்பு மற்றும் மலையகப்பிராந்தியம்**
அருட்பணி பி. ராஜன் றொகான்
திரு. றொஷான் யோசெப்
திருமதி ரி. வசந்தமலர்
செல்வி ஜோய்ஸ் சுலக்சனா

**பரியோவான் பயிற்சிநிலைய பிரதிநிதி**
திரு. வி. சின்னத்துரை

**கிறிஸ்வ இறையியல் கல்லூரி பிரதிநிதி**
அருட்பணி எம். ஜெயானந்தராஜா

**சேவைத்திருப்பணி மன்ற பிரதிநிதி**
அருட்பணி. எஸ். செல்வக்குமார்

என்போர் ஆவர். கூட்டமானது பேரவைத் தலைவரின் ஜெபத்துடனும் ஆசீர்வாத்ததுடனும் மாலை 8.15 மணியளவில் நிறைவுற்றது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38 வது பட்டமளிப்பு விழாவில் **முதுமாணி** பட்டத்தை பெற்ற அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் ஊழியரும், வாலிபப் பணி இணைப்பாளருமான

**அருட்பணி. எம். ஜெயானந்தராஜா**

அவர்களுக்கு

**உதயதாரகையின் பாராட்டுக்கள்**

## "சகாய கீதங்கள்"
### இறுவெட்டு வெளியீட்டு விழா

"சகாய கீதங்கள்" சின்னண்ணனின் பாடல்கள் இறுவெட்டு வெளியீட்டு விழா 30-04-2024 அன்று மாலை 03.00 மணிக்கு ஜெரோம் அண்ணன் தலைமையில் கிறிஸ்த சேவ ஆச்சிரமம் மருதனார்மடத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஆச்சிரமத்தில் நடைபெற்ற இறை வழிபாட்டைத் தொடர்ந்து பெரியண்ணன் ஞாபகார்த்த மண்பத்தில் நிகழ்வு ஆரம்பமானது. ஆச்சிரம ஞாயிறு



பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனத்தை தொடர்ந்து ஜெரோம் அண்ணன் வரவேற்புரையை நிகழ்த்தினர். மேலும் தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் பேரருட் கலாநிதி. எஸ். ஜெபநேசன், கலாநிதி. ம. ரூபவதனன், திரு. த. குருகுலராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இதனை தொடர்ந்து தென்னிந்திய திருச்சபையின் யாழ் ஆதினத்தின் பேராயர் பேருட்கலாநிதி. வி. பத்மதயாளன் அவர்களினால் இறுவெட்டு வெளியீட்டப்பட்டு




அதன் முதற்பிரதியை நவாலி சி.ஏ.சி.எம் திருச்சபையின் அங்கத்தவர்களான சின்னண்ணனின் உறவினருக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் வழங்கப்பட்டது இந்நிகழ்வில் 23 குருவானவர்கள் உட்பட சுமார் 250 ஆச்சிரம அன்பர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள்

# கவிக்களம்

## போட்டி இல.02 இன் கவிதை

## அங்கு அவர் இல்லை

பரிசுத்த வானவன் பரமனின் மைந்தனின்
உயிர்பிரிந்து சென்றதுமே
அரிமத்தி யாஊர் அன்பன் யோசெப்
அண்ணலின் உடலைப்பெற்று
பரிமள வர்க்கங்கள் பட்டுடல் மீதிலே
துணியினால் சுற்றிவைத்து – வேறு
ஒருவரும் வைத்திரா கல்லறை தனிலே
வைத்தனன் எடுத்துச்சென்று

அனைத்தும் முடிந்து அடுத்தநாள் அனைவரும்
அமைதியில் ஓய்ந்திருந்து – மறு
தினத்தில் பலருடன் மகதலேனா மரியாள்
கல்லறை நபடிச்சென்று
திகைத்தனள் கண்டு கல்லும் பிரண்டறை
கிடந்தங்கே வெறுமனே – மேலும்
பதைத்தவர் நிற்கையில் பக்கத்தில் இருவர்
ஒளிமின்னும் உடையுடனே

நின்றவர் இவர்களை நோக்கி நீங்கள்
உயிரோடு இருப்பவரை
இறந்தவர் இடத்தில் தேடுவது எனை
நீங்கள் இங்கவரை
என்றவர் கள்சொல்லி உயிர்பெற் றெழுந்தார்
இங்கு அவரில்லை – என்னும்
அன்றுங்கள் கூடவே கலிலேயா வினிலே
அவர் இருந்தவேளை

மனுமகன் பாவிகள் கைகளில் ஒப்புக்கொடுத்து
பாடுகள் பட்டிடவும் – தேவ
மைந்தனன் சிலுவையில் ஆணியால் அறைந்து
கொல்லப் பட்டுவிடவும்
மூன்று நாட்களில் உயிர்பெற்று எழுந்திட
வேண்டும் என்பதையும் – அன்றே
முன்னறி வித்திருந்த செய்தியை நீங்கள்
நினைத்திடுங்கள் என்றும்

சொன்னதும் அன்றவர் சொன்னதை மகதலேனா
மனதினிலே நினைத்து
உன்னதன் உயிர்ப்பின் முன்னறி விப்பின்
உண்மைதனை உணர்ந்து
எண்ணியே நின்றாள் இயேசுதன் முன்வந்து
இரட்சிப்பை ஈந்து – தனக்கு
அண்ணித் தருளும்வகை ஆனதாய் கண்ணுற்றாள்
அகமது களிகூர்ந்து

டே. த. எட்வின் அரசரட்ணம்
உடுவில் திருச்சபை



திரு. டே. த. எட்வின் அரசரட்ணம்
உடுவில் திருச்சபை

### கவிக்களம்

போட்டி இல 01 மற்றும் இல 02 க்கான வெற்றியாளர்




# நிலம் புலம்புகின்றது!!!

(யூன் 05, உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி கிறிஸ்தவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் உள்ள பொறுப்புணர்வை ஏற்படுத்தும் கிறிஸ்தவ சிந்தனையாகும்)

நான் அன்புடன் ஐயா என்று அழைக்கும் எனது அம்மப்பாவின் வாழ்விடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மரப்பாலம் எனும் விவசாய கிராமத்தில் இருந்தது. உண்மையில், அது ஒரு பசுமையான இயற்கை வளங்களுடன் ஒன்றிணைந்த பண்ணை வீடாகும். வீடு களிமண்ணினால் கட்டப்பட்டு, ஒரு வகையான நாணல் புல் கட்டுக்களினால் வேயப்பட்ட கூரையைக் கொண்டிருந்தது. நிலத்தை எனது சித்திமார் சாணம் கொண்டு பூசுவதை நான் பலமுறை பார்த்த ஞாபகம் இன்னமும் உண்டு. தென்னை,



மா, கொய்யா, வாழை, பப்பாசி என பல கனிதரும் மரங்களுடன் காய்கறி தோட்டமும் வீட்டைச் சுற்றி காணப்பட்டன. வீட்டின் தலை வாசலுக்கு வலது புறம் குளிர்ச்சியான நீரோடை ஓடிக்கொண்டே இருக்கும். நான் அந்த நீரோடையில் மீன் குஞ்சுகள், வயல் நண்டுகளை கையால் பிடித்த அனுபவமும் உண்டு. சில காலங்களில் அந்த நீரோடையின் ஓரத்தில் காணப்படும் நாணல் புற்களின் இடையே சில்லுத்தாரா என்னும் ஒரு வகை பறவை இனங்கள் கூடுகட்டி முட்டையிடும், நான் அதன் முட்டைகளை எடுத்து விளையாடியும் உள்ளேன்.

எனது வீடு வாழைச்சேனை என்னும் ஊரில் உள்ளது. ஆயினும் எனது வீட்டில் இருந்து 22 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் எனது அம்மப்பாவின் வீடே எனக்கு எப்போதும் "சொர்க்கம்". நமது நாட்டில் ஏற்பட்ட யுத்தங்களின் காரணமாகவும் கடுமையான இராணுவ கட்டுப்பாடுகள் காரணமாகவும் 1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நான் மிக நீண்ட நாட்களாக மரப்பாலத்திற்கு செல்லவில்லை. எனது ஐயாவின் குடும்பத்தாரும் இடம்பெயர்ந்து எமக்கு அருகில் வசிக்க வந்து விட்டனர்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், பல ஆண்டுகளுக்குப் பின்னர், 2011 ஆம் ஆண்டு மீண்டும் மரப்பாலத்தில் இருந்த பண்ணை வீட்டை பார்வையிடச் சென்றேன். அன்றைய நாள் எனக்கு பேரதிர்ச்சியும் பெரும் துயரமும் நிறைந்த நாளாக இருந்தது. எமது அம்மப்பாவின் வீடு முற்றாக சிதைவுற்று இருந்தது. கனிதரும் மரங்கள், வயல் நிலங்கள் யாவும் முற்றிலும் சேதமுற்று கிடந்தன. பசுமையான நிலம் சிதைவுற்று காணப்பட்டது. பூக்கள் காய்கள் செடிகள் எதனையும் காணவில்லை. என்னை அறியாது எனது கண்கள் கலங்கின. நான் அப்படியே சற்று நேரம் புற்தரையில் அமர்ந்து உள்ளம் உடைந்தவனாக எதுவும் பேசாது அமைதியாக இருந்தேன்.

அப்போது தான் நிலம் புலம்புவதை என்னால் உணர முடிந்தது *"எவ்வளவு காலம் மண்ணுலகம் புலம்பி கொண்டிருக்கும்? வயல்வெளி புற்பூண்டுகள் எல்லாம் வாடிக்கிடக்கும்?* (எரேமியா 12:14) என்னும் இறைவாக்கு நினைவுக்கு வந்தது.

நாம் வாழும் சூழமைவில், எம்மை சுற்றி காணப்படுகிற நிலப்பரப்புகளில் பல நிலங்கள் இன்றும் புலம்பிக் கொண்டுதான் இருக்கின்றன. பல நிலங்கள், இயற்கையாகவே கடவுள் அதற்கு கொடுத்த இயல்பான சாயலை இழந்து, அடையாளத்தை இழந்து, சாரத்தை இழந்து தவிக்கின்றது. எமது நாட்டில் நடைபெற்ற நீண்ட காலயுத்தம் காரணமாக பல நிலங்கள் இராணுவ ஆக்கிரமிப்பு கட்டமைப்பாக மாற்றப்பட்டன. இரசாயன நச்சு நிறைந்த களைநாசினி, கிருமிநாசினி மற்றும் பசளை வகை காரணமாக பல விவசாய நிலங்கள் இறந்துக் கொண்டே இருக்கின்றன.

மனித முதலாளித்துவ பேராசை காரணமாக மண் அகழ்வு, அதித கட்டிடங்கள் காரணமாக நில வளியோட்டம், நிலத்தடி நீரின்றி நிலம் புலம்புகின்றது.

மண்ணுலகில் குடியிருப்போர் செய்த தீமை காரணமாகவே நிலம் புலம்புவதாகவும், அதன் உயிரினங்கள் அழிந்து போவதாகவும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முன்பள்ளி ஆசிரியருக்கான பயிற்சிப் பட்டறை - யாழ்

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை யாழ் பிராந்திய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி பட்டறை ஜுலை மாதம் 06ஆம், 07ஆம் திகதிகளில் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மருதனார்மடத்தில் நடைபெற்றது. இதில் 13 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இச் செயலமர்வில் வளவாளராக முன்பள்ளி உதவி கல்வி பணிப்பாளர் (வடமராட்சி) திரு. கே. சத்தியசீலன் அவர்களால் சூழல் என்றால் என்ன? சூழலின் வகைகள், அவற்றின் மூலம்



மாணவர்களுக்கு நாம் எதை கற்பிக்க வேண்டும்? என்பதை தெளிவு படுத்தினார். அதனைத் தொடர்ந்து திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணாநந்தன் அவர்கள் "கடமைகளும் பொறுப்பும்" என்ற தலைப்பில் சமூகப் பொறுப்பு? சூழல் தொடுவான பொறுப்பு? பொருளாதாரப் பொறுப்பு? என்பவற்றை கற்றுக் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து செல்வி. எம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## 17 வருடங்களை நிறைவு செய்யும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை

(01ஆம் பக்க தொடர்ச்சி)

ஆரம்பிக்கப்பட்டன. இவர்கள் யாழ் மண்ணில் கல்விப்பணி, மருத்துவப்பணி, சமூக மேம்பாட்டுப்பணி என்பவற்றுடன் நற்செய்திப் பணியையும் பரந்தளவில் மேற்கொண்டனர்.

இவர்களால் நெடுந்தீவு தொடக்கம் நாகர்கோயில் வரை 154 பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. இவற்றுக்குள் கிராமப் பாடசாலைகள், திண்ணைப் பள்ளிக்கூடங்கள், ஆங்கில மொழிப் பாடசாலைகள், விடுதி பெண்கள் பாடசாலைகள், உயர் கல்விக்கூடங்கள், பத்திரிகைப் பணி, அச்சுக் கூடப்பணி, அகராதிப்பணி போன்றவைகள் அடங்குகின்றன. மருத்துவப் பணிகளில் சுதேச மக்களுக்கான முதல் வைத்தியசாலை, முதல் மருத்துவக்கல்லூரி, பெண்கள் சிறுவர்களுக்கான வைத்தியசாலை போன்றவற்றையும் உருவாக்கினார்கள்.

இவ்வாறு பரந்துபட்ட பணிகளை இவர்கள் செய்து வரும் காலத்தில் 1940 களில் தென்னிந்தியாவிலே திருச்சபைகளின் ஒன்றிப்பு குறித்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு 1947 ஆம் ஆண்டு தென்னிந்திய திருச்சபை உருவானது. அவ்வாறு உருவான தென்னிந்திய திருச்சபையில் அமெரிக்கன் சிலோன் மிசனுடைய பணிகளைச் செய்து வந்த தென்னிந்திய ஐக்கிய சபையினுடைய யாழ்ப்பாணச் சபா சங்கமும் இணைந்து கொண்டது. அது தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாணப் பேராயம் என அழைக்கப்பட்டது. பேராயர்கள் குலேந்திரன், அம்பலவாணர், ஜெபநேசன் ஆகியோருடைய வழிகாட்டுதலில் வளர்ச்சி கண்ட திருச்சபை 2005 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இன்னுமொரு பேராயர் தேர்தலை சந்திக்க வேண்டி ஏற்பட்டது. அவ்வேளையில் ஒழுங்குகள் நடைமுறைகளுக்கு அப்பால் தென்னிந்திய திருச்சபையின் தலைமைப்பீடம் செயற்பட்டு முறையின்றி ஒரு பேராயரை நியமனம் செய்தது.

இதன் காரணமாக நீதிக்காகவும் உண்மைக்காகவும் போராடிய பெரும்பான்மையான திருச்சபை மக்களும், சபைகளும், குருமார்களும், திருச்சபைப் பிரதிநிதிகளும் இணைந்து 2007 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 03ம் தேதி தாம் தென்னிந்திய திருச்சபையை விட்டு பிரிந்து மறுபடியும் தங்கள் தாய் திருச்சபையின் அனுசரனையுடன் "அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை" என்ற பெயரில் இறைபணியாற்றப் போவதாக மானிப்பாய் தேவாலயத்தில் பிரகடனம் செய்து கொண்டார்கள். இதுவே அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் உதயம். அவ்வேளையில் 43 குருமார்களும் 51 திருச்சபை பிரதிநிதிகளும் நம்மோடிருந்தனர் என்பது முக்கியமான விடயமாகும்.

இன்று அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபைக்கு வயது 17. வாலிப மிடுக்குடன் பயணிக்கும் இத்திருச்சபை நடந்து வந்த பாதைகள் வலி மிக்கவை; சவால்கள் நிறைந்தவை. ஆனாலும் ஆன்மீக அனுபவங்களை அனைவருக்கும் அள்ளிக் கொடுத்த ஆண்டுகளையே திரும்பி பார்க்க முடிகிறது. ஆரம்ப காலத்தில் அனுபவங்களை மீட்டுப் பார்த்து ஒற்றுமையுடனும், உண்மையுடனும், அர்ப்பணிப்புடனும் சாட்சி மிக்க பெரிய பணிகளைத் தொடர்ந்து ஆற்றிட உதயதாரகை ஆசிக்கின்றது.

## வாருங்கள்...

(02ஆம் பக்க தொடர்ச்சி)

கர்த்தர் மீண்டும் ஏழாம் மாதம் இருபத்தோராம் தேதியிலே மீண்டும் செருபாபேல் யோசுவா என்னும் தலைவர்களிடம் "நீ திடன்கொள் தேசத்தின் ஜனங்களே திடன்கொள்ளுங்கள் நான் உங்களுடனே இருக்கிறேன் என்று பேசினார். இறைவன் கூறுகிறார் நீங்கள் எகிப்திலிருந்து புறப்படுகையில் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின்படியே என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார். பயப்படாதேயுங்கள் என்று யூதாவின் ஜனங்களை தேற்றுகிறார். ஆகாய்:2:1-8.

அன்பானவர்களே இறைவன் நம்மை பார்த்து கூறுகிறார் முந்தின காரியங்களை நினைத்து நீ சோர்ந்து போக வேண்டாம், திடன்கொள் அன்பானவர்களே இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட போது எப்படி இறைவன் அவர்களோடு கூட இருந்து அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து மகிமையாய் வழிநடத்தி வந்தாரோ அதே வல்லமையோடு இன்று நம் நடுவிலும் இருக்கிறார். எனவே நாம் நம்முடைய முந்திய வாழ்க்கையை எண்ணி அசைபோடுவதை விட்டுவிட்டு நாம் நிஜமான நிகழ் கால வாழ்வை சந்தோசமாய் ஏற்றுக்கொண்டு வாழ வேண்டும். எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நாம் இறைவன் தரும் பெலத்தோடு திடன்கொண்டு உற்சாகமாய் நம் ஆவிக்குரிய வாழ்க்கையாகிய ஆலயத்தை கட்ட வேண்டும். நமது இறைவன் பிரமாண்டத்தை பார்க்கிறவர் அல்ல. நமக்கிருக்கிற பெலத்தோடு உற்சாகமாய் உண்மையாய் நமது ஆலயத்தை கட்டும் படி இறைவன் அழைக்கிறார். சாலொமோன் கட்டின ஆலயம் மகிமையுள்ளது என எண்ணிய யூதாவின் ஜனங்களை பார்த்து சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் முந்தின ஆலயத்தின் மகிமையை பார்க்கிலும் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாய் இருக்கும். எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் பாருங்கள். உற்ச்சாகமாய் கட்டுவோமா?

### 3. பரிசுத்தமாய் கட்டுவோமாக!!!

மூன்றாவதாக நாம் நம்முடைய ஆலயத்தை கட்டும் போது பரிசுத்தமாய் கட்ட வேண்டும் என தேவன் விரும்புகிறார்.

வேதம் கூறுகிறது நீங்கள் இறைவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்களென்றும், இறைவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் இறைவனுடைய ஆலயத்தைக்கெடுத்தால், அவனை இறைவன் கெடுப்பார் இறைவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது நீங்களே அந்த ஆலயம். 1கொரிந்தியர்:3:16-17.

நாம் இறைவனுடைய ஆலயத்திற்கு வருகிறதாலோ திருவிருந்தில் பங்கு கொள்ளுவதாலோ பரிசுத்தமடைய முடியாது. இறைவன் தங்கும் நம்முடைய ஆலயம் சுத்தமாயிருக்க முதலாவது நம்முடைய இருதயத்தின் உட்புறம் சுத்தமாய் இருக்க வேண்டும். நாம் இறைவனிடத்தில் நம்மை ஒப்புக்கொடுத்து நம் மனதை திருப்பும் பட்சத்தில் "இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்" என்று தேவன் வாக்குரைத்திருக்கிறார். இன்றே ஒப்புக்கொடுப்போம் தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுவோம்.

### 4. உற்சாகமாகக் கட்டுவோமாக!!!

செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் என் ஊழியக்காரனே " உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்".

பிரியமானவர்களே கர்த்தர் சொல்லுகிறார் நீ உன் ஆலயத்தை கட்டும் போது உற்சாகமாக, பயமின்றிக் கட்டு நம்மை தெரிந்துக்கொண்ட இறைவனையே பற்றிக்கொண்டு எந்த பயமுமின்றி உற்சாகமாய் ஆலயத்தை கட்டுவோம். தேவன் நம்மையும் முத்திரை மோதிரமாக வைப்பார்." ஒரு அரசனின் முத்திரை மோதிரம் என்பது மிகவும் சக்தி வாய்ந்தது. நாமும் இறைவனை உண்மையாய் பற்றிக்கொண்டு இறைவன் வாசம் செய்யும் நம் ஆலயத்தை கட்டும் போது நம்மையும் முத்திரை மோதிரமாக உயர்த்துவார்.

ஞான கன்மலையாகிய கிறிஸ்துவில் அஸ்திபாரம் போட்ட நாம் இறைவன் வாசம் செய்யும் ஆலயத்தை உற்சாகத்தோடும் பரிசுத்தத்தோடும் திடன்கொண்டு அனுதினமும் கட்டுவோம். ஆவிக்குரிய வாழ்க்கையிலும் அனுதினமும் அடுத்த நிலைக்கு உயர பிரயாசப்படுவோம். அப்பொழுது இறைவன் நம்மில் பிரியமாய் இருந்து நம்மில் மகிமைப்படுவார். நம்மையும் இறைவன் தெரிந்துக்கொண்டு முத்திரை மோதிரமாக உயர்த்துவார். இறைவன் தாமே நம்மோடிருந்து நம் ஒவ்வொருவரையும் இன்று முதல் என்றும் ஆசீர்வதித்து உயர்த்துவாராக.

நாம் வேறு வேறு பின்னணிகளிலிருந்து வந்திருக்கக் கூடும். எமது வாழ்வு முறை, கலாச்சாரம், பண்பாடு என்பன வேறு வேறாக இருக்கக் கூடும். நாம் ஒன்றாக இணைந்து, சி. ஏ. சி. எம் எனும் ஒரு மாபெரிய கைங்கரியத்தைச் செய்ய ஆண்டவர் துணை புரிந்திருக்கிறார். நாம் வெவ்வேறு பின்னணிகளிலிருந்து வந்திருந்தாலும், ஒரே சரீரத்தில் உள்ள அவயவங்களாக இணைந்திருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். இதைத்தான் ஆண்டவர் இயேசுவும் விரும்புகிறார். எனவே தான் அவர் தனது செபத்தில், "அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்க" என வேண்டுதல் செய்கிறார். அத்துடன் ஒரே சரீரத்தில் உள்ள வெவ்வேறு அவயவங்களுக்கு வெவ்வேறு பணிகள் வழங்கப்பட்டிருப்பது போல், திருச்சபைகளில் வெவ்வேறு பணிகள் தரப்பட்டுள்ள வெவ்வேறு நபர்களாக நாம் உள்ளோம். ஆனால் வெவ்வேறு அங்கங்களை இயங்க வைப்பது எமது தலையே ஆகும். அது போல் திருச்சபைகளில் எமக்கு வெவ்வேறு பணிகள் தரப்பட்டாலும், எமது தலை இயேசு கிறிஸ்துவே. அவரே எம்மை இயங்க வைப்பவர். ஆந்த இடத்தில் நாம் யாவரும் ஒன்றாக இணைகிறோம்.

என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்தேன் அப்பொழுது அவர்கள் எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்.

(நெகேமியா 2 : 18 ).

ஏ.பி.றி

# நிலம் புலம்புகின்றது...

(10ஆம் பக்க தொடர்ச்சி)

இறைவாக்கினன் **எரேமியா** எச்சரிக்கின்றார். (எரேமியா 12:04) படைப்புகள் அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிப்பதாக **புனித பவுல்** தொடக்கத் திருச்சபைக்கு எடுத்து கூறுகின்றார். (உரோமர் 08:22)

கிறிஸ்துவர்களாகிய எமக்கு கடவுளின் அனைத்துப் படைப்புகளை குறித்தும், குறிப்பாக நிலம், நீர் அத்தோடு தொடர்பு கொண்டு வாழும் உயிரினங்கள், சுற்றுச்சூழல் தொடர்பான காத்திரமான பொறுப்புண்டு என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இக்கட்டுரையில் நிலம் புலம்புவதைப் பற்றிய எனது உணர்வை பதிவிடுகிறேன். இன்று இராணுவ மயமாக்கல், முதலாளித்துவ பொருளாதாரம், இரசாயன தொழில்நுட்பம் மற்றும் திட்டமிட்ட வள சுரண்டல்களினால் நிலம் வலிந்து சேதப்படுத்தப்படுகின்றன. அவ்வாறு அழிவுக்குள்ளான நிலையில் ஆக்கிரமிப்புகளுக்குள்ளான நிலையில் உள்ள நிலங்கள் புலம்புகின்றன. இவை மனிதரின் தீய செயல் காரணமாகவே புலம்புகின்றன. ஆக, இவ்வாறான நிலங்கள் மனித தீமைகளில் இருந்து விடுவிக்கப்பட அதன் இயற்கையான இயல்பு நிலையை அடைய கிறிஸ்தவர்கள் கரிசனையோடு செயல்படுவது, அதற்கான பணித்திட்டங்களை வகுப்பது காலத்தின் அவசியமாகும்.

*பின்பு, நான் புதியதொரு விண்ணகத்தையும் புதியதொரு மண்ணகத்தையும் கண்டேன்.* (திருவெளி 21:01)

கிறிஸ்தவர்களாகிய நாம் புதிய மண்ணலகத்தைப் பற்றிய தரிசனத்தை எதிர்நோக்கி காத்திருக்கின்றோம். இறையாளுகையின் விழுமியங்கள் அங்கிகரிக்கப்பட்டு நடைமுறையில் வருகின்ற போது, இறை ஆளுகைக்குள் முழு உலகும் கூட்டி இணைக்கப்படுகின்றபோது நிலம் புதுப்பிக்கப்படும். தனது இயல்பான சாயலை மறுபடியும் பெற்றுக்கொள்ளும்.

**நிலமே! நீ அஞ்சாதே: மகிழ்ந்து களிகூறு. ஏனெனில், ஆண்டவர் பெரிய காரியங்களை செய்வார்.** யோவேல் 02:21

**அருட்பணி. ராஜன் றோகான்**

## முன்பள்ளி ஆசிரியருக்கான...

(11ஆம் பக்க தொடர்ச்சி)



சிவானி அவர்களால் உளவியல் தொடர்பான பாடம் கற்பிக்கப்பட்டது. இரண்டாம் நாள் செயலமர்வில் வளவாளர் திரு. ரி. சசிகரன் அவர்களால் சித்திர கலை செயல்பாடுகளை தெளிவுபடுத்தினார். மதிய இடைவேளை பின்னர் ஆசிரியர்களான கலந்துரையாடல் நடைபெற்று பிராந்திய தலைவரின் இறுதி ஜெபத்துடன் செயலமர்வு இனிதே நிறைவு பெற்றது.

இதன்போது திருச்சபையின் தலைவர், யாழ் பிராந்திய குருமுதல்வர், யாழ் பிராந்திய செயலாளர், யாழ் பிராந்திய பொருளாளர், காரைநகர் திருச்சபை குருவானவர் மற்றும் சேவைதிருப்பணிமன்ற நிர்வாக அலுவலர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## அன்பின் வாசகர்களே!

கடந்த காலத்தில் தங்கள் ஆக்கங்களுக்கூடாகவும் செய்திகளுக்கூடாகவும் ஜெபங்களுக்கூடாகவும் நன்கொடை களுக்கூடாகவும் உதவியமைக்கு நன்றிகள்.

தொடர்ந்தும் தங்கள் ஆக்கங்களையும் செய்திகளையும் உதயதாரகை இதழுக்கு தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் இத்திருப்பணியை உங்கள் ஜெபங்களுக்கூடாகவும் நன்கொடைகளுக்கூடாகவும் தாங்கும் படியும் அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**
The Editor, The Morning Star, Asia House,
Maruthanarmadam, Chunnakam. 0777 422 207.
E.mail : *themorningstar1841@gmail.com*

# திருமறையின் வரலாற்றில் இடம் பிடித்த பெண்கள்

சிபில் தேவகி ஞானபிரகாசம்

## எலிசபெத்



## பக்தியும் பொறுப்புமுள்ள குடும்பப் பெண்

எலிசபெத் ஆரோனுடைய பெண்பிள்ளைகளில் ஒருவராகக் காணப்பட்டவள். ஆரோன் எலிசபெத் ஆகியோர் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் இயேசுவின் தாயாகிய மரியாள் யூதா கோத்திரத்தில் வந்த தாவீதினுடைய பரம்பரையைச் சேர்ந்தவர். உறவினர்களாக இருந்த இந்த இரு கோத்திரத்தாருக்கிடையில் நடைபெற்ற திருமணங்களின் வழியாக இவர்களிருவரும் உறவினர்களாக விளங்கினார்கள். எலிசபெத்தினுடைய கணவன் பெயர் சகரியா. இவன் அபியா என்னும் ஆசாரிய வகுப்பிலே ஆசாரியப் பணியினைச் செய்து வந்தவன். இவர்கள் இருவரும் மலைநாட்டில் உள்ள யூதா என்னும் பட்டணத்திலே வாழ்ந்து வந்ததுடன் இருவரும் வயது சென்றவர்களாகவும் இருந்தனர்.

எலிசபெத் ஒரு பக்தியுள்ள பெண். ஆசாரியர்கள் யூத பாரம்பரியம்மிக்க கன்னிப் பெண்களையே திருமணம் செய்வார்கள். எலிசபெத் ஒரு ஆசாரியினுடைய மனைவி என்பதே அவருடைய பக்தி வாழ்வின் அளவு கோலாகும். சகரியாவும் எலிசபெத்தும் கடவுளுடைய எல்லாக் கற்பனைகளிலும், நியமங்களிலும் குற்றமற்றவர்களாக நடந்து கடவுளுக்கு முன்பாக நீதியுள்ள ஒரு வாழ்க்கையினை வாழ்ந்து வந்தனர். எலிசபெத் மலடியாக இருந்தபடியினால் அவர்களுக்கு நீண்டகாலம் பிள்ளைகள் இல்லாதிருந்தது. இருவருமே வயது சென்றவர்களாகவும் காணப்பட்டனர். பிள்ளைகள் இல்லை என்ற காரணத்தினைக் கொண்டு கணவனோ, மனைவியோ திருமண உறவினை முறித்துக் கொள்ளலாம். அதன் பின்னர் இருவரும் மறுபடியும் வேறு திருமணம் செய்துகொள்ளவும் முடியும். ஆனால் இவர்களோ அப்படியான தவறினைச் செய்யாமல் திருமண வாழ்வினுடைய தூய்மையைக் காத்துக்கொண்டனர். ஆனாலும் விசுவாசத்துடன் கடவுளிடம் பிள்ளைச் செல்வத்துக்காக விண்ணப்பங்களைச் செய்து வந்தனர்.

ஒரு நாள் கடவுளுடைய தூதன் சகரியாவின் முன்பாகத் தோன்றி **“உன் வேண்டுதல் கேட்கப்பட்டது”** என்று கூறினான். இவர்களுக்குச் குழந்தைச் செல்வம் கிடைக்காமல் இருப்பதற்கு எலிசபெத்தே காரணம் என லூக்கா 01:07இல் கூறப்பட்டுள்ளது. **“எலிசபெத் மலடியாயிருந்த படியினால் அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது”**. ஆனால் கணவனான சகரியாவோ மனைவியின் குறைவினால் எரிச்சல் அடையவுமில்லை, விவாக இரத்துச் செய்யவுமில்லை, மாறாகக் கணவன் சகரியா கடவுளிடத்தில் பிள்ளைச் செல்வத்துக்காக மன்றாடுகின்றான். இதன் வழியாகக் குடும்பத்தினுடைய சமாதானம் காத்துக் கொள்ளப்படுகின்றது.

எலிசபெத்தினுடைய ஒரு சிறந்த பண்பு இங்கு வெளிப்படுகின்றது. தன்னிலேயும் தன்னுடைய தாம்பத்திய வாழ்விலும் குறை உண்டென அவள் அறிந்துகொண்டபோதும் அன்னாளைப்போல அழுது புலம்பவில்லை. தன்னிலே குறைவு உண்டென கண்டுகொண்டபோதும் அடிமைப் பெண்ணைத் தன்னுடைய கணவனுக்கு மறுமனையாட்டியாகக் கொடுக்கவும் முன்வரவில்லை. இவள் பொறுமையுடனும் அன்புடனும் கணவனைப் பராமரித்ததுடன் அவனுடன் இணைந்து குடும்பப் பொறுப்புக்களை நிறைவேற்றிய பெருமைக்குரிய ஒரு பெண்ணாகவும் விளங்குகின்றாள்.

**திருமறை ஆதாரங்கள் லூக்கா 1ம், 2ம் அதிகாரங்கள் - எலிசபெத்**

இப்பத்திரிகையானது ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள றூபன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 12.07.2024 திகதி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையினாரால் வெளியிடப்பட்டது.